
வார இதழ்
# தேசியம்
www.thesiyamnews.com
THESIYAM ජෙසියම්

Smart Fly
ARUN WINGS
TRAVELS & TOURS
கடவுச் சீட்டு / வீசா சேவை / ETA வீசா / பயணக் காப்பீடு
விடுமுறை பயணத்தொகுப்பு / பயணத்திட்டம்
ARUN WINGS TRAVELS & TOURS (Pvt) Ltd
143, Temple Road, Jaffna. Tel: 076 8472458, 076 6668680
arunwingslanka@gmail.com

மலர் - 02 | இதழ் - 21 | 29.05.2024 - 05.06.2024 | வள்ளுவர் ஆண்டு 2054 | பக்கங்கள் 12 | ஊக்குவிப்பு : ரூ.80.00





பக்கம் 10

# ரணில் - விக்கி சந்திப்பு!
## மீண்டும் ரணிலின் தந்திரம் வெற்றி.


## ஈழத் தமிழர் விடயத்தில் சர்வதேச நாடுகள் மௌனம்!
### அன்புமணி ராமதாஸ் கண்டனம்.



ஈழப் போரில் கொல்லப்பட்ட தமிழர்களுக்கு நீதி பெற்றுத் தருவதாக ஐக்கிய நாடுகள் சபையில் பாரதம் குரல் கொடுக்க வேண்டும். ஈழத்தமிழர்களுக்கு நீதி வழங்காவிட்டால் இலங்கையுடனான உறவை முறித்துக் கொள்வதாக இந்தியா எச்சரிக்க வேண்டும். ஈழத்தமிழர்களின் தந்தை நாடான இந்தியா, அதன் தூதரக வலிமையை முழுமையாகப் பயன்படுத்தி ஈழத்தமிழர்களுக்கு நீதி பெற்றுத்தர வேண்டும் என்று பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்தார்.

பக்கம் 10

## சிறிலங்கா உள் விவகாரங்கள் கண்காணிக்கப்பட வேண்டும்.
### அமெரிக்க ஆணைக்குழு ஜோ பைடன் அரசுக்கு வலியுறுத்து!



இலங்கையில் தமிழர்களுக்கு எதிராகத் தூண்டப்படுகின்ற அமைதியின்மை மற்றும் வன்முறைகளைத் தடுப்பதற்கு இலங்கையை கண்காணிப்புப் பட்டியலில் சேர்க்கவேண்டும் என்று ஜோ பைடன் தலைமையிலான அரசாங்கத்துக்கு சர்வதேச மதச் சுதந்திரம் தொடர்பான அமெரிக்க ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது

பக்கம் 10

## தமிழர் தரப்பு பொது வேட்பாளர் விவகாரம்!
## தீர்க்கமான முடிவு விரைவில்!
### ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி அறிவிப்பு.


பக்கம் 10

# சிங்களத் தலைவர்களின்
## மேலாதிக்க மனோநிலை மாறப்போவதில்லை
நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன்



பக்கம் 10

தேசியம் THESIYAM
ஆசிரியர் பீடம்
தொலைபேசி : +94 76 567 3339
மின்னஞ்சல் : thesiyamnews@gmail.com
இணையம் : www.thesiyamnews.com



## நிலைப்பாடு நோக்கிப் பயணிப்போம்.



பிரித்தானியப் பேரரசின் காலனித்துவ நாடாக இருந்த இலங்கை சுதந்திரமடைந்ததுமுதல் தமது உரிமைகளை வென்றெடுப்பதற்காக போராட்டத்தினைத் தொடங்கிய தமிழர்கள் தமக்குள் ஒற்றுமைப்படுவதில் உள்ள சிக்கல்கள் போராட்டத்தினை வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்வதில் இன்றுவரை முக்கியமான தடைக்கல்லாகும்.

பேரணிகள், சத்தியாக்கிரகங்கள், போராட்டங்கள் என்று அகிம்சை வழியிலான முயற்சிகளை மேற்கொண்டு பலனற்றுப்போன நிலையில் ஆயுத வழிக்கு தமிழர்கள் வலிந்து தள்ளப்பட்டனர். அந்த ஆயுத வழிப் போராட்ட இயக்கங்களுக்கிடையில் ஏற்பட்ட முரண்பாடுகளால் பிரிந்து சின்னாபின்னமாகியது தமிழர்களது போராட்டமே. அதனால் நமக்குள்ளேயே அழிவுகளை ஏற்படுத்திக் கொண்டோம். கூடவே துரோகங்களும், விரோதங்களும் அதிகரித்தன. அதனால் இழப்புகள் நம்மவர்களுக்கே அதிகம். அதற்கான ஒரு முற்றுப்புள்ளியாக, பட்டறிவின் வெளிப்பாடாகத்தான் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கினார். அப்போதும் சில பிசிருகள் இருந்தன. ஆரம்பமிருந்தே பிரச்சினைகள் அதிகாரத்துவத்தினால் ஏற்பட்டுக் கொண்டேயிருந்தன.

இருந்தாலும் அந்த இணைப்பு ஒவ்வொரு தேர்தலிலும் தனிப்பட்ட அதிகார வெறி காரணமாக விலகல்களையும் பிளவுகளையும் கொண்டுவந்தது. ஆரம்பத்தில் சின்னம், பின்னர் பங்கீடு, தலைமை, அதிகாரம் எனப் பிரச்சினைகள் 2009 இன் பின் பெருத்து இப்போது வேறு ஒன்றாக மாறிவிட்டிருக்கிறது.

வடக்கு கிழக்கு மாகாணங்கள் பாரம்பரியமான தமிழர் தாயகப் பிரதேசம் என்றே நாம் எல்லோரும் காலங்காலமாகக் கூறிவருகிறோம். இருந்தாலும், சிங்களக் குடியேற்றங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. தமிழர் தாயக நிலப்பரப்பு சுருங்கிக் கொண்டு வருகிறது. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் போராட்டங்கள் தொடர்கின்றன. பௌத்த மயமாக்கல் செயற்பாடுகள் நின்றபாடில்லை. தமிழர்கள் மீதான நெருக்கடிகள் முடிவுக்கு வரவில்லை. இருந்தாலும் நமக்குள் நாம் மோதிக்கொண்டேயிருக்கிறோம். பேரினவாதத்தின் திட்டமிடல்களை இந்த இடத்தில் மறந்துவிடுகிறோம்.

இனப்பிரச்சினைக்கான தீர்வாக, தமிழ் மக்களுடைய கோரிக்கையான நிரந்தர அரசியல் தீர்வுக்கான முன்னேற்றகரமான வேலைத்திட்டங்கள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை. வெறும் பேசுப்பொருளாக மாத்திரமே அரசியல் தீர்வும், அரசியலமைப்பு மாற்றமும் இருந்து வருகிறது. அரசியல் தீர்வு கிடைக்கும் வரை தமிழ் மக்கள் தொடர்ந்து போராட வேண்டும் என்ற வெற்றுக் கோசத்துடன் தமிழர்களது நகர்வுகள் இருந்து வருகின்றன.

தமிழ் ஜனாதிபதி பொது வேட்பாளரை நிறுத்துவோம், தமிழர்களின் கருத்தை சர்வதேசத்துக்கு வெளிப்படுத்துவோம் என்றெல்லாம் தேவையற்ற விடயங்களில் ஈடுபடுவதனைத் தவிர்த்து அரசியல் தீர்வை நோக்கிய நகர்வுகளையும் சர்வதேசத்திற்கு இலங்கை அரசாங்கத்தின் மீதான குற்றச்சாட்டுக்களை நிரூபிப்பதற்குமான வேலைத்திட்டங்களிலேயே தமிழ்த் தலைமைகள் ஈடுபட வேண்டும். காலத்துக்குக் காலம் வீசும் புயல்களில் சிக்கி அல்லல்படும் வீணான காலங்கடத்தல்களைத் தவிர்க்க வேண்டும். அத்துடன் மக்களை சரியானமுறையில் அரசியல் மயப்படுத்தும் செயற்பாடும் நடைபெறவேண்டும்.

யுத்தம் மௌனிக்கப்பட்டு 15 ஆண்டுகள் கடந்து விட்டன. மீண்டும் ஒரு மே 18 வந்துவிட்டது. அதனை நினைவு கூருவதும் அதற்காக பல நெருக்குதல்களைச் சந்திக்கவேண்டியதும் நம்முன்னிருக்கிறது. அப்போதும் உரிமை மறுக்கப்படுவதாக சத்தமும் கூச்சலுமிடுவதனை நாம் செய்வோம். தமிழர்களின் உரிமைப் போராட்டத்தில் உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்த அன்னை பூபதியின் நினைவு நாளை அனுஸ்டித்துக் கொண்டிருக்கிறோம். அவருடைய தியாகம் மறக்கப்படுகின்ற விடயமாக தமிழர் மனங்களிலிருந்து அகன்று வருகிறது. அதே போன்றே திலீபனின் தியாகமும் இருக்கிறது.

தமிழர்களின் இன விடுதலைக்கான போராட்டம் காலம் செல்லச்செல்ல தமிழர்களாலும் மறக்கப்படுகின்ற விடயமாக மாற்றம் பெறும். போராட்டத்தில் பல்வேறு இயக்கங்கள் ஒரே கொள்கையின் அடிப்படையிலேயே ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் தனியே விடுதலைப்புலிகளுடைய நோக்கம் என்றானது. மற்றையவர்கள் துரோகிகளாக்கப்பட்டனர். அதனால் உருவான கோபங்களும் தாபங்களும் மக்களை வேறு வேறு மனோநிலைகளுக்கு கொண்டு சென்றது. அதனால் உருவாகியிருக்கின்ற வேறுபாடுகள் களையப்பட வேண்டும். அத்துடன் நம் தமிழ் அரசியல் தரப்புகளிடமிருக்கின்ற கொள்கை வேறுபாடுகள் களையப்படுவதும் நிலைப்பாட்டுக்காகவே போராட்டத்தை முன்கொண்டு செல்வதுமே காலத்தின் கட்டாயமாகும்.

எமது கட்சியே அதிகாரமுடையதாக இருக்கவேண்டும். நானே தலைவராக இருக்கவேண்டும், எங்களது குழுவே அதிகாரம் செலுத்தவேண்டும் என்பதெல்லாம் தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்ற முனைபவர்களுக்கு எதற்காக ஏற்படுகிறது என்பதே இந்த இடத்தில் கேள்வியாகும். விட்டுக்கொடுப்புகளுக்குத் தயாராகா நிலைப்பாட்டிலிருந்து தமிழ் அரசியல் தலைமைகள் இறங்கியாக வேண்டும்.

இலங்கையின் சுதந்திர தினத்தை கருப்பு நாளாக அனுஸ்டிப்பதனால் மாத்திரம் நாம் நமது உரிமையைப் பெற்றுவிட முடியாது. யுத்தத்தில் காணாமலாக்கப்பட்டோருக்கான நீதி கிடைக்கவேண்டுமென்று 14 வருடங்களாக போராடி வரும் தாய்மாரின் ஏக்கங்கள் நிவர்த்திக்கப்படவில்லை. ஜனாதிபதிகள் மாறியிருக்கிறார்கள். அரசாங்கங்கள் மாறியிருக்கின்றன. அரசியல்வாதிகள் மாறியிருக்கிறார்கள். நம் தமிழ் அரசியலிலும் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

தமிழ் மக்களின் தேசிய உணர்வும் கொள்கை நிலைப்பாடும் காரண காரியமின்றி உருவான ஒன்றல்ல. இலங்கை அரசியலில் அரசாங்கங்கள் மாற்றமுறுவதும் அதன் தலைவர்கள் ஒன்றைச் சொல்வதும் அதனை வைத்துக்கொண்டு காலங்கடத்துவதும் பின்னர் மறந்துவிடுவதும், ஏமாற்றுவதும் வழமையானதாகவே இருந்து வருகின்றன. அதே போலவே தமிழர் தரப்பிலும் கொண்ட கொள்கை, நிலைப்பாட்டைத் தவிர்த்து வேறு வழி செல்வதும் அனுசரிப்பதும் நடைபெற்றேயிருக்கிறது.

பேரினவாதத் தரப்பானது சிறுபான்மை மக்களை பிரித்தாளும் முயற்சியில் வெற்றி கண்டது. விரோதங்களை வளர்த்துவிட்டது. இப்போதும் அது தொடர்கிறது. அதே போன்று தமிழர்களிடையே முரண்பாடுகள் உருவாவதற்கும், உருவாக்குவதற்கும் மிகக் கனகச்சிதமான முயற்சிகளை மேற்கொண்டுமிருக்கிறது.

இலங்கையின் வரலாற்றில் அரசியல் ரீதியானதும், அனுபவ ரீதியானதுமான பட்டறிவுகள் பயன்படாதிருக்கின்ற நிலைமையில் மாற்றம் ஏற்பட்டாகவேண்டும். அல்லாது போனால் காலத்தில் காணாமல்போனவர்களாக நாமும் மாறிவிடுவோம்.

தமிழ் மக்களுக்கு கொள்கை ஒன்றே முக்கியம் என்பது நிரூபணமானதற்கு தமிழர் அரசியல் வரலாறு சான்று பகரும். அதற்கு ஜீ.ஜீ.பொன்னம்பலம் முதல் ஆனந்தசங்கரி வரை நாம் உதாரணமாகக் காண்பிக்கமுடியும். அந்த வகையிலேயே ஆயுதப் போராட்ட காலத்தினையும் அதனால் ஏற்பட்ட வலியையும் வேதனையையும் மக்கள் தாங்கிக் கொண்டனர்.

தமிழர்களது நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டுவிடாதா என்ற எதிர்பார்ப்பைக் கொண்டிருக்கின்ற பேரினவாத சக்திகளுக்கு இடங்கொடாது முன்நகர்வோம். விட்டுக் கொடுப்புகளை நம் தமிழ் அரசியல் தலைமைகள் தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றும் நோக்கத்துக்கான நிலைப்பாட்டுக்காக மேற்கொள்வோம் என்று உறுதிமொழியெடுத்துக் கொள்வோம்.

**ஆசிரியர்**

# விவசாயத்தில் அரசாங்கத்தை முழுவதும் நம்பவேண்டாம்

**கலாநிதி ஆறுதிருமுருகன்**




விவசாய விஸ்தரிப்பு தொடர்பாக அரசாங்கத்தை முழுவதும் நம்பி இருக்காது வடக்கு கிழக்கு தமிழர்கள் ஒன்றிணைந்து மாற்று ஒழுங்குகளை கூட்டாக முயற்சிக்க வேண்டும் அது காலத்தின் கட்டாயமாகும் என அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உப தலைவர் கலாநிதி ஆறுதிருமுருகன் தெரிவித்தார்.
வடக்கு கிழக்கு மாகாணங்களில் விவசாய செய்கைகள் தொடர்பிலும் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக கேட்டபோதே அவர் இதனை தெரிவித்தார்.

விவசாயத்தை காப்பது எங்கள் ஒவ்வொருவரது தலையாய கடமை வடக்கு கிழக்கு மாகாணத்தில் விவசாய செய்கை ஆனது தொடர்ந்து வீழ்ச்சி அடைந்து செல்கின்றது. தகுந்த ஆலோசனைகள் வழங்க எவரும் இல்லாத காரணத்தினால் வடக்கு கிழக்கு மாகாணத்தை சார்ந்த மக்கள் பெரும் நஷ்டத்தினை எதிர்நோக்குகின்றார்கள். வடக்கில் விவசாயத்தில் ஈடுபடுகின்றவர்கள் மிகவும் குறைந்து செல்கின்ற நிலை காணப்படுகின்றது. மரவள்ளி போன்ற உள்ளூர் உப பயிர்களை உற்பத்தி செய்பவர்கள் மிக குறைவாக உள்ளனர். அதே நேரத்தில் வெங்காயம் போன்ற விளைச்சல் தரும் நிலங்கள் கட்டடங்களாக மாறிக் கொண்டு வருகின்றன. பல இடங்களில் போதிய விவசாய அனுபவம் இல்லாத காரணத்தினால் புதிய புதிய நோய்களில் இருந்து விவசாயிகள் பயிர்களை பாதுகாக்க முடியாமல் தவிக்கின்றனர். கிழக்கிலும் பல்வேறு விதமான பிரச்சனைகள் காணப்படுகின்றன. அங்கு காட்டு யானைகளின் தொந்தரவினால் பலர் உயிரிழப்பினை சந்தித்த காரணத்தினால் பெரும்போக, சிறுபோக செய்கைகள் செய்வோர் நிலங்களுக்கு செல்வதற்கு அஞ்சுகின்றனர். இக்காரணத்தினால் பல இடங்களில் வேளாண்மை குறைவடைந்து வருகின்றது.

நெல்லுக்கான உத்தரவான விலையும் சரியான தீர்மானங்களும் தாமதமாக எடுக்கப்படுவதனால் போக செய்கையின் போது நெல்லை விற்பனை செய்ய முடியாது மிகவும் அவதியுற்றதை நாம் அறிவோம். எனவே வடக்கு கிழக்கு மாகாணத்திலிருந்து விஞ்ஞான, விவசாயத்துறை சார்ந்த ஏராளமான பட்டதாரிகள் வெளியேறிய போதிலும் விவசாயத்துறைக்கான தகுந்த ஆலோசனைகள் வழங்குபவர்கள் இல்லை. இலங்கை விவசாயத்திணைக்களத்தில் பல பிரதேச நிறுவனங்கள் செயற்பட்டு வருகின்ற போதிலும் அவற்றினாலும் விவசாயிகளின் பிரச்சனைகளை முறையாக தீர்க்க முடியவில்லை.
சமீப காலமாக தென்னந்தோட்ட செய்கையில் ஈடுபட்டுள்ளவர்கள் பெரும் நஷ்டத்தினை எதிர்நோக்கிக் கொண்டு இருக்கிறார்கள். தென்னை மரங்களுக்கு தொடர்ந்தும் புதிய பல்வேறு விதமான நோய்கள் ஏற்பட்டு வருகின்றன. அந்நோய்களுக்கான மருந்துகள் மிகவும் விலை கூடியவையாக காணப்படுகின்றன. அந்த மருந்துகளை எவ்வாறு தெளித்தாலும் உயரம் குறைந்த தென்னங்கன்றுகளுக்கு பாவிக்க கூடியதாக இருந்ததே தவிர 15,20 அடியை தாண்டி வளர்ந்த தென்னை மரங்களுக்கு பாவிக்க முடியாது போன காரணத்தினால் வடக்கில் பல தென்னைச் செய்கையாளர்கள் நஷ்டத்திற்கு ஆளாகியுள்ளனர். இத்தகைய சந்தர்ப்பங்களில் பல்கலைகழக விவசாய துறை சார்ந்த புத்தி ஜீவிகளும் விஞ்ஞான துறை சார்ந்த புத்தி ஜீவிகளும் விவசாய விரிவாக்க உத்தியோகத்தர்களும் இணைந்து கூட்டு முயற்சிகள் எடுத்து விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை தீர்க்க முன்வர வேண்டும். அத்தகைய முயற்சிகள் முறையாக இடம்பெறாத காரணத்தினால் வடக்கு. கிழக்கு விவசாய த்துறை வீழ்ச்சியை சந்தித்து

மிகுதி 8ம் பக்கத்தில்....



# ஜீ.நடேசன் எனும் ஊடகவியலாளர்

**– படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் 20ஆவது ஞாபகார்த்த தினத்தையொட்டி இக் கட்டுரை பிரசுரமாகிறது.–**

யாழ்ப்பாணம் நெல்லியடியில் பிறந்து வளர்ந்த ஜி.நடேசன் மட்டக்களப்பினைத் தன்னுடைய நிரந்தர வசிப்பிடமாக மாற்றியிருந்தார். இங்கிருந்தே அவருடைய ஊடகப்பணியினையும் மேற்கொண்டுவந்தார். 2004 ஆம் ஆண்டு மே மாதம் 31ஆம் திகதி மட்டக்களப்பு வாவிக்கரை வீதியிலுள்ள தனது வீட்டில் இருந்து காலை பணிக்குச் சென்று கொண்டிருந்தபோது எல்லை வீதியில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார். நான்கு பிள்ளைகளின் தந்தையான இவர் படுகொலை செய்யப்பட்டபோது அகவை 50 ஆகும்.

**– இலக்குவன் –**

நீண்ட காலம் ஊடகப் பணி செய்து அனுபவம் பெற்றிருந்த இவர், ஊடகத்துறையில் பகுதிநேர ஊடகவியலாளராக இருந்தாலும், ஒரு முழுநேர ஊடகவியலாளனைவிடவும் சிறப்பாகப் பணியாற்றிவந்திருந்தார் என்று சொல்லாம். இவரது பணிக்கு சாகித்திய விருது, சிறந்த ஊடகவியலாளர் விருது (2000), ஆளுநர் விருது போன்ற பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ளார்.

இலங்கையில் இனமுரண்பாடுகள் எனும் பெயரில் நூலுருவாக்கமும் செய்து வெளியிட்ட அவர் உள்நாட்டு இறைவரித் திணைக்கள மட்டக்களப்பு கிளையில் உயர் பதவியிலிருந்தபோதும் ஊடகத்துறையினைக் கைவிடாது தொடர்ந்து பயணித்திருந்தார்.

20 வருடங்களுக்கு மேலாக கொழும்பு வீரகேசரி பத்திரிகையின் செய்தியாளராகவும், "நெல்லை நடேசன்" என்ற பெயரில் பத்தி எழுத்தாளராகவும் இருந்த இவர், 1997ஆம் ஆண்டு முதல் லண்டனை தளமாகக் கொண்டியங்கிய ஐ.பி.சி வானொலி, சக்தி வானொலி, தொலைக்காட்சி உட்பட ஏனைய பல ஊடகங்களுக்கு பணியாற்றியுள்ளார்.

ஆற்றல், துணிச்சல் கொண்ட அவரது தனித்துவ எழுத்துக்கள் சமூக விரோதிகளுக்கு; சிம்ம சொப்பனமாக அமைந்தன. அதனால் ஒரு சிறந்த ஊடகவியாலாளனான ஜீ.நடேசனை தீயவர் துப்பாக்கி பதம் பார்த்தது எனலாம்.

நேருக்கு நேர் பேசும் இவரது நடைமுறை காரணமாக, உண்மையை அல்லது மக்களிற்கு பாதகமான விடயங்களை வெளிப்படுத்துவதில் கடுமையாக இருந்தார். இதனால், பல தடவைகள் நேரடியாகவும், தொலைபேசி ஊடகவும் கொலை மிரட்டல், அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருந்த போதிலும், வீட்டின் மீது குண்டுத் தாக்குதல் (2000ஆம் ஆண்டு) இடம்பெற்ற போதிலும் கூட, அஞ்சாது தனது குடும்பத்துடன் இறுதி வரை மட்டக்களப்பு மண்ணில் இருந்து ஊடகப்பணியாற்றினார். நாட்டுப்பற்றாளர் என ஐய்யத்துரை நடேசனுக்கு மதிப்பளிக்கப்பட்டதன் மூலம் அவர் ஆற்றிய பணியின் சிறப்பு உணரப்படுகிறது.

ஊடகவியலாளர் நாட்டுப்பற்றாளர் ஜி.நடேசன், மாமனிதர் சிவராம், மயில்வாகனம் நிமலராஜன், லசந்த விக்கிரதுங்க, டிச்சர்ட் டி சொய்சா வரை நாற்பதிற்கும் மேற்பட்ட ஊடகர்கள் இதுவரை படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இவர்களைப் படுகொலை செய்தவர்கள் யார் என்று தெரிந்திருந்தும், அவர்கள் தண்டிக்கப்படவும் இல்லை. இழக்கப்பட்ட உயிர்களுக்கு இது வரை நீதி கிடைக்கவும் இல்லை.

நடேசனின் படுகொலை தொடர்பாக, நேரடியான சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டு, கொலையாளிகள் இனங்காட்டப்பட்ட நிலையிலும் இதுவரையில் எந்தவித விசாரணைகளும் அரசாங்கத்தினால் முடித்துவிடப்படவில்லை. நடேசன் உட்பட அனைத்து ஊடகவியலாளர்களின் படுகொலைகள் தொடர்பிலும் உரிய விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என போராட்டங்களை, நினைவு நிகழ்வுகளை நடத்துபவர்கள் கோரிக்கைகளை முன்வைக்கின்றனர்.

தொடர்ச்சியாக ஊடகக்காரர்கள் மீது அளுத்தங்கள், அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டு வரும் நிலையில் தமக்குத் தாமே சுய தணிக்கைகளையும் பாதுகாப்புகளையும் மேற்கொண்டவண்ணம் செய்திசேகரிப்பு, வெளியிடுகைகளில் ஈடுபடுங்கள் என்று மாத்திரமே சொல்லிக் கொள்ளக் கூடியநிலை காணப்படுவதாகவே கொள்ளலாம்.

குருகுலத்தின் குருசிஷ்ய உறவாகத்தான் அன்றைய ஊடகக் கலாசாரம் இருந்ததாக உணர மட்டுமே முடிகிறது. எல்லோரும் எதிர்பார்க்கின்ற தொழில்முறை ஊடகவியல் கட்டமைப்பு, சிந்தனை வளர்ச்சிபெறாத அன்றைய காலகட்டத்தில் குரு சீடத் தளத்திலேயே தமிழ் சமூகத்தின் ஊடகத்துறை காணப்பட்டது. ஆனாலும் ஒரு கட்டுக்கோப்பான வகையிலேயே அது வளர்ந்தும் இருந்தது. நான் நினைப்பதெல்லாம் செய்தி, நான் கொடுப்பதே செய்தி என்ற நிலை இப்போது உருவாகிவிட்டது.

20 வருடங்களைக் கடந்தும் நடேசனின் படுகொலைக்கான நீதி கிடைக்கவில்லை. தேடல், திரட்டல், தொகுத்தல், தெளிவாகக் கொடுத்தல் என்பதே ஊடகவியலாகும். அவற்றினைச் சரிவரச் செய்கின்றவர்களாக செயற்படுத்துகின்றவர்களாக இன்றைய, எதிர்கால பத்திரிகைக்காரர்கள் வளர்ச்சிபெற வேண்டும் என்பதே நடேசனைப் பற்றிச் சிந்தித்தால் மேலோங்கி நிற்கும்.

சிரேஸ்ட ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் ஊடகத்துறைப் பணி வெறுமனே செய்தித் துறை சார்ந்து மாத்திரம் ஏற்பட்டதல்ல. அவருடைய பல்துறை சார்ந்த ஈடுபாடு, அனுபவம், முயற்சிகளின் பயனானதே. அதற்கு அவர் எதிர்கொண்ட, எதிர்கொள்ள உருவாக்கிக்கொண்ட சூழல் என்பனவும் காரணம்தான்.

பத்திரிகைக்காரர்கள், இலத்திரனியல் ஊடகங்களுக்குப் பணியாற்றுபவர்கள் அனைவரையுமே ஊடகவியலாளர்கள் என்று அழைக்கின்ற அல்லது நாமேசொல்லிக் கொள்கின்ற தன்மை இன்றைய காலங்களில் வளர்ந்திருக்கிறது. அதனை ஏற்றுக் கொள்பவர்களும் ஏற்காதவர்களும் சமூகத்தில் இருக்கிறார்கள். அதற்கேற்றாற்போல் நம்மை நாம் தகுதியானவர்களாக்கிக் கொண்டோமா, ஆக்கிக் கொள்கிறோமா என்று நாம் ஒவ்வொருவரும் நமக்குமுன் பணியாற்றியவர்களை நினைவிருத்திச் சிந்திக்கவேண்டும்.

ஞாபகார்த்த நிகழ்வுகளை நடத்துவதனை வெறுமனே கொண்டாட்டம் என்று நினைக்கின்ற மனோநிலையில் இருந்து நாம் மாற்றமுற வேண்டும். அவர்கள் அமைத்து வைத்த படிக்கட்டுகள் போன்ற கட்டடங்களில் ஏறி நிற்கும் நாம் அவர்கள் விட்டுச் சென்ற பணிகளை தொடர்வது ஏன் முக்கியம் என்பதனையும் ஞாபகப்படுத்துவது நல்லதே.

ஒவ்வொரு கால கட்டமும் ஒவ்வொரு வகையினதாக முக்கியம் பெறுவதும் ஞாபகங்கள், வரலாறுகள், படிப்பினைகள், பொறுப்புக்களை விட்டுச் செல்வதுதான் வழக்கம். அந்த வகையில் மட்டக்களப்பின் ஊடகத்தரப்பின் பரம்பரையினரும் பலதையும் எதிர்காலத்தினர் கையில் கையளித்தே சென்றுள்ளனர்.

கடும்போக்குவாதத்தினை எதிர்க்கும் ஒவ்வொருவருக்கும் தண்டனை கடுமையானதாகவே இருக்கும் என்கின்றதான பதில்கள் காலத்தின் வரலாற்றில் கருப்புப் புள்ளிகள் என்பதற்கப்பால் அகற்றமுடியா இரும்புத் திரைகளே. அதிகாரம் அடக்குமுறையைப் பிரயோகிக்கையில் நாம் எதனைச் சாதித்து விடமுடியும். எல்லோருக்கும் முடியாததை நாம் செய்துவிட்டோம் என்று மார்தட்டிக் கொண்டு மட்டும் வாழ்ந்துவிடமுடியாது தொடர்ச்சியானதும் தொடரவேண்டியது மானவற்றையும் நாம் செய்தே ஆக வேண்டும். எழுத்தாளர் பரம்பரைகளும், பத்திரிகையாளர் பரம்பரைகளும் வரலாறுகளில் பதியப்பட்டாலும் நாம் வரலாற்று நாயகர்களாக வாழ்வதால் மட்டும் பயன் என்ன வந்துவிடப்பாகிறது. ஏதிர்கால சந்ததியினை சரியானதும் திறமையானதுமாக நகர்த்துவதற்கு முயலாவிட்டால் அதன் பயன் என்ன. படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான நினைவு நிகழ்வுகள் நடத்தப்படுவதும் நீதி கோரும் போராட்டங்கள் நடத்தப்படுவதும் எந்தப் பயனுமற்ற முயற்சிகளாக இருந்தாலும் அவர் விட்டுச் சென்ற பணியினைத் தொடர்வதாக இந்த 20ஆவது ஞாபகார்த்த தினத்தில் உறுதிபூணுவோம்.

## விகாரையை வழிபட்டு பிரித் ஓதுமாறு தமிழ் பொலிஸார் மீது கட்டாயப்படுத்தல்?



யாழ்ப்பாணம், மே 27 வெசாக் தினத்தில் மாவிட்டபுரம் கெமுனு விகாரைக்கு தமிழ் பொலிஸார் கட்டாயப்படுத்தி அழைத்துச் செல்லப்பட்டு வழிபட வைக்கப்பட்டனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இராணுவத்தின் உயர் பாதுகாப்பு வலயமாக மாவிட்டபுரம் இருந்தபோது எந்த அனுமதியும் பெறப்படாமல் இந்து ஆலய வளாகத்துக்குள் கெமுனு விகாரை கட்டப்பட்டது.

இந்த நிலையில், வெசாக் தினத்தன்று பிக்கு ஒருவர் அந்த விகாரைக்கு வருகை தந்தார். இதன்போது, தமிழ் பொலிஸார் கட்டாயமாக அங்கு வருகை தந்து வழிபாட்டில் ஈடுபட வேண்டும் என்று காங்கேசன்துறை பொலிஸ் பிராந்திய உயர் அதிகாரிகள் கட்டளை இட்டனர்.

இவ்வாறு அழைக்கப்பட்டவர்கள் தமிழில் பிரித் ஓத வைக்கப்பட்டனர் என்று தெரிய வருகின்றது.




தென்னாசியாவிலேயே அதிக நூல்களைக் கொண்ட சுமார் ஒரு லட்சம் புத்தகங்கள், சுவடிகளைக் கொண்ட அழகிய நூல் நிலையம் சிங்களப் பேரினவாதிகளால் எரிக்கப்பட்ட இச்சம்பவம் தமிழ் இன அழிப்பு என்ற சிங்கள இனவாதிகளின் மன எண்ணத்தை உலகிற்கே வெளிப்படுத்திய முக்கிய சான்று எனலாம்.

1981 ஜுன் 1இல் யாழ் நூலகம் எரிப்பு மூலம் தமிழ் மக்களின் நெஞ்சங்களில் மூட்டிய தீயின் வெம்மை இன விடுதலைப் போராட்டத்திற்கு மேலும் உரமூட்டியது என்பதே உண்மை. சர்வாதிகாரி, கொடூர ஹிட்லர் கூட தன் படைகளுக்கு இட்ட கட்டளைகளில் ஒன்று நூல் நிலையங்களை அழிக்கக் கூடாது என்பதாகும். ஆனால் ஜெ.ஆரின் படைகள் அதனையும் விட்டுவைக்காமல் எங்கள் அணையாத அறிவாலயத்தை எரித்து, மாறாத வரலாற்று வடுவை தமிழ் மக்கள் மனதில் ஏற்படுத்தினர்.










– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

# பண்பாட்டுப் படுகொலை :

## 1981 ஜீன் 1 தீயில் சாம்பலான யாழ் நூலகம் !

### பண்பாட்டுப் படுகொலை

தமிழ்மக்களின் பண்பாட்டு அறிவுப்பெட்டகமாகவும், அணையாத அறிவாலயமாக மிளிர்ந்த யாழ் நூலகம் ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் இளம் சீடர் காமினி திசாநாயக்கவின் மேற்பார்வையில் அரச பயங்கரவாத உச்சத்தில் 1981 ஜுன் 1 ஆம் திகதி தீ மூட்டி எரிக்கப்பட்ட கொடூர நாளாகும்.

அடக்குமுறை அரசுகளின் தொடர்ச்சியான 1958, 1977, 1883இல் நிகழ்ந்த திட்டமிடப்பட்ட இனக்கலவரங்களால் தமிழர்களின் பொருளாதார வளங்களும், அறிவியல், பண்பாட்டு நிலையங்களும் அழித்து நாசமாக்கப்பட்டன.

தென்கிழக்காசியாவில் முதன்மையாக விளங்கியது இப்பொதுசன நூலகம். மேலும் சர்வதேச நூலக மட்டங்களுடனும் யாழ் நூலகம் சிறப்பான நிலையிலிருந்தது. அச்சியந்திர சாதனங்கள் எழுமுன்பாக கையால் எழுதப்பட்ட சுவடிகள், பனையோலை வாசகங்கள் இப்படியாக தொல்பொருள் நிலையம் போன்று யாழ் நூலகம் செயற்பட்டு வந்தது. நூலக காங்கிரஸில் யாழ் நூலகம் அங்கத்துவம் வகித்தது.

### நெருப்பில் கருகிய ‘ஈழநாடு’ :

இதன் தொடர்ச்சியாகவே யாழ். நூலகமும் தீக்கிரையானது. இச்செயல்கள் அனைத்தும் அரசின் திட்டமிடப்பட்ட செயலாகவே அமைந்தன. யாழ். எம்.பி.யின் வீடு, ஈழநாடு பத்திரிகை அலுவலகம், நகர வர்த்தக நிலையங்கள், ஆகியனவும் நாச்சிமார் கோவிலும் இக்கால வேளையிலேயே எரித்து நிர்மூலமாக்கப்பட்டன. இவ் எரிப்புகள் எல்லாவற்றிலும் மேலாக யாழ். நூலகம் எரிக்கப்பட்டதே தமிழ் பேசும் மக்களின் பாரிய இழப்பாகும்.

வரலாற்றுப் புகழ்வாய்ந்த யாழ் நூலகத்தின் மற்றோர் சிறப்பு அக்கட்டிடத்தின் சிற்ப அமைப்பே எனலாம். யாழ் நூலக கட்டிடம் தமிழரின் வரலாற்றுப் பொக்கிசமாகவே அனைவரையும் கவர்ந்தது.

அக்காலத்தில் இந்த நூல்நிலையம் எரிக்கப்பட்ட செய்தியை முற்றாக இருட்டடிப்புச் செய்ய ஜெ.ஆர். அரசாங்கம் முயற்சித்தது. இச் சம்பவத்தை விசாரிக்க நியமிக்கப்பட்ட லயனல் பெர்னாண்டோ விசாரணைக்குழு ஒரு கோடி ரூபா நட்டஈடுவழங்குமாறு அரசாங்கத்தைப் பணித்தபோதும் நட்ட ஈட்டுத் தொகையாக ஒரு ரூபாவைக்கூட வழங்க ஜே.ஆர். அரசாங்கம் முன்வரவில்லை.

தமிழ் மக்களின் அரிய சொத்தாக யாழ் நூலகம் விளங்கியது. தமிழ் வாசகர்களும், ஆராய்ச்சி அறிஞர்களும் நாடிச் செல்லும் ஒரு கேந்திர நிலையமாக அது அமைந்தது. தமிழ் மக்களின் தேசிய மேம்பாட்டின் அடையாளமாகவே யாழ் நூலகம் விளங்கியது. தமிழர்மேல் எழுந்த ஆத்திரம், பகைமை, எரிச்சல் அவர்களுடைய சொந்த நூலகத்தின் மேலே அரச பயங்கரவாதத்தால் இந்நூலகம் தீக்கிரையானது. இவ்வாறான பண்பாட்டு மையங்களை அழித்து இன்னோர் இனத்தின் எரிச்சலுக்கும் பகைமைக்கும் கொடுமைக்கும் காலாயுள்ள கருத்தோட்டங்களைப் “பேரினவாதத்தின் உச்சக் கட்டம் என்றே குறிப்பிடுவர். பெரும்பான்மையான ஓர்இனம் சிறுபான்மையினரை ஒடுக்கும் சிறுமையை நோக்கிய அவமானச் செயலாக இந்நூலகம் தீக்கிரையாக்கப்பட்டது.

இதற்காக மன்னிப்புக் கோரவோ நட்டஈடு வழங்கவோகூட முன்வராத ஜே.ஆர் ஜெயவர்த்தனவும் அவரது படைகளும் பின்னரும் பல சிறிய நூலகங்களைச் சிதைத்தது கசப்பான வரலாறு தான்.

### செங்கல்லும் வெண்தாமரையும் :

1994 இல் சமாதான தேவதையாக வெள்ளைப்புறாவாக காட்சியளிக்க முயன்ற சந்திரிகா அம்மையார் தனது எதிராளி ஜனாதிபதி வேட்பாளர் காமினி திசாநாயக்கவிற்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் எதிராக எடுத்த முக்கிய ஆயுதங்களில் ஒன்றாக இந்த நூல் நிலைய அழிப்பு இருந்தது.

காமினி திசாநாயக்கவின் இறப்புக்குப் பின் அந்த ஆயுதத்தை கீழே போட்ட சந்திரிகா தமிழரையும், உலகையும் ஏமாற்ற மட்டும் அதை இடையிடையே எடுத்து தூசு துடைப்பது வழமையாகும்.

சந்திரிகா அரசு கூட இதனை மனப்பூர்வமான பிரச்சினையாகக் கொள்ளவில்லை எனபதை அவர் மேற்கொண்ட நடவடிக்கைகள் எடுத்துக்காட்டின.

சரவதேச நிதி உதவிகளுடன் யாழ். நூல் நிலையப் புனருத்தாரண நிதி என்ற பெயரில் அவர் ஆரம்பித்த நிதியத்தில் சேர்ந்த பணத்தின் ஒரு பகுதி தென்பகுதி நூல்நிலையங்களுக்கு செலவிடப்பட்டது என்பது அக்காலத்தில் உறுதிப்படுத்தப்பட்டது.

சமாதானப் பிரியையாக அவர் தென்பகுதியில் நடத்திய வெற்றிக் களியாட்டங்களில் புத்தகமும் செங்கல்லும் அவர் முன்வைத்த ஏமாற்றுக் கோசங்களில் ஒன்றாகும். அவர் சேகரித்த செங்கற்களுக்கு நேர்ந்த கதி என்பது தெரியாத போதும் அவர் சேகரித்த புத்தகங்களில் பெரும்பாலானவை சிங்களப் புத்தகங்கள் என்பது வெளிவந்த செய்தியாகும்.

1995 நடுப்பகுதியில் யாழ் மண்ணை ஆக்கிரமித்துக் கொண்ட நிலையில் யாழ் மக்களின் மனங்களை வெல்ல சந்திரிகா அரசு எடுத்த நடவடிக்கைகளில் ஒன்று அங்குள்ள நூல் நிலையம் ஒன்றை ஆரம்பித்து வைத்ததாகும்.

இடிந்தழிந்த நூல் நிலையத்தை யாழ்ப்பாணத்திற்குக் குறியீடாக அடிக்கடி தொலைக்காட்சியில் காட்டி வந்த சந்திரிகா அம்மையார் நூல்நிலையத்துக்குப் புதிய கட்டிடம் ஒன்றை அமைக்கக்கூட முன்வரவில்லை. ஏற் கனவே இருந்த கட்டிடம் ஒன்றிற்கு வர்ணம் பூசிய தொலைக்காட்சி உரைமூலம் அதனைத் திறந்து வைத்ததை யாவரும் அறிவர்,

வரலாற்றையும் பண்பாட்டையும் ஆவணப்படுத்தி எதிர்காலத்துக்கு வழங்குவதில் உலகிற்கு பறை சாற்றுவதில் நீண்ட நெடும் பயணம் செய்து கொண்டுள்ள நவீன உலகு அறிவைத்தேடும் வழி முறைகளில் பல மைல்கள் பயணம் செய்துள்ளது.

ஈழத்தமிழர் தம் வரலாற்றை உலகிற்கு உண்மைகளை வெளிக்காட்ட ஆவணப்படுத்த வேண்டும்,

### “அணையாத அறிவாலயம்” :

இனமேன்மை வாதத்தின் ஒரு அதீத வெளிப்பாடு தான் யாழ் நூலக எரிப்பு. அந்த வெளிப்பாட்டின் தீங்கையும் கொடுமையையும் வெளிப்படுத்தும் ஆவணமாக வெளிவந்த “அணையாத அறிவாலயம்” கவிதை தொகுப்பில்

**1994 இல் சமாதான தேவதையாக வெள்ளைப்புறாவாக காட்சியளிக்க முயன்ற சந்திரிகா அம்மையார் தனது எதிராளி ஜனாதிபதி வேட்பாளர் காமினி திசாநாயக்கவிற்கும், ஐக்கிய தேசிய்க் கட்சிக்கும் எதிராக எடுத்த முக்கிய ஆயுதங்களில் ஒன்றாக இந்த நூல்நிலைய அழிவு இருந்தது.**

இன்னும் இவர்கள்
போதி மரத்தினில் ‘பிரித்’
ஓதல் வேண்டுமா?
நல்ல நூல்களை எரித்து
குளிர் காயலாமோ! என்று ஆத்திரம் கலந்த எதிர்க்குறிப்போடு கவிதைகள் அனலாய் பாய்கின்றன.
வாளேந்திய
சிங்கக் கொடியாளர்கள்
சிம்மாசனத்தில் ஏறிய பின்
மக்கட்
சிரங்களையே அறுத்தனரே
அரசாள்வோர்
ஹிட்லரின் அடிச்சுவட்டில்
தொடரும் இனவாதம்
ஹிட்லரை மீறுகின்றதோ! என வினா எழுப்பப்படுகிறது. யாழ்ப்பாண நூல் நிலையம் அழிக்கப்பட்ட கொடிய செயல் உணர்வுக் கூர்மையுள்ள தமிழ் உள்ளங்களை எவ்வளவு கடுமையாகத் தாக்கியுள்ளது என்பதை இக்கவிதைகள் மூலம் புலப்படுத்துகின்றன. பண்பாட்டுப் படுகொலையின் அதி உச்சமான இக்கொடூர நிகழ்வு அகிலம் பூராக வெளிப்படுத்தப்படல் வேண்டும். மனித வாழ்வியத்தின் இழுக்கேடாக நிகழ்ந்த கலாச்சாரப் படுகொலையான யாழ் நூலகத்தின் எரிப்பினை தமிழ் மக்கள் என்றும் நினைவு கூர்ந்து கொள்வர். யாழ்நூலகம் எரிப்பு சந்ததி மறவாச் சரித்திரமாக வரலாற்றில் நிலைத்து நிற்கும்.

# தமிழ்த் தேசியத்தின் வீழ்ச்சிக்கு



# யாழ்.மையவாத சிந்தை காரணமாகக் கூடாது!

–புருஜோத்தமன் தங்கமயில்–

கருணா அம்மான் என்கிற விநாயகமூர்த்தி முரளிதரன். கடந்த பொதுத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிட்ட போது, வாக்குகள் பிரிந்து தமிழர் பிரதிநிதித்துவம் இழக்கப்படும் என்று பல தரப்புக்களினாலும் எச்சரிக்கப்பட்டது. தேர்தல் முடிவிலும் அது பிரதிபலித்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தனக்குக் கிடைத்த ஒரேயொரு தேசியப்பட்டியல் உறுப்பினர் பதவியை, தவராசா கலையரசனுக்கு வழங்கி அம்பாறைக்கான தமிழர் பிரதிநிதித்துவ வெற்றிடத்தை நிவர்த்தி செய்தது. ஆனால், கருணா அம்மானின் அம்பாறைக்கான வருகையை அன்று கணிசமான மக்கள் ஆதரித்தார்கள். புத்திஜீவிகளும், இளைஞர்களும்,சமூகத்தில் ஆளுமை செலுத்துவோரும் கருணாவின் கடந்த கால வரலாற்றைப் புறந்தள்ளி, அவருக்கு ஆதரவளித்தார்கள். குறிப்பாக, அம்பாறையில் இருந்து புலம் பெயர்ந்துள்ளவர்களில், குறிப்பிட்டளவானோர் கருணாவின் வெற்றியை சாத்தியப்படுத்தும் நோக்கில் பிரச்சாரத்துக்கான நிதிப்பங்களிப்பைக் கூட செய்திருக்கிறார்கள். தமிழ்த் தேசிய சிந்தனைகளில் இருந்து எந்தவொரு தருணத்திலும் தடம்புரளாத அம்பாறை தமிழ் மக்கள் ஏன் கருணாவை ஆதரிக்க வேண்டி வந்தது? அதன் பின்னணி தொடர்பில் அம்பாறையில் தோல்வியடைந்த தமிழ்த் தேசியக் கட்சிகள் எவையும் ஆராயவும் இல்லை. அதுகுறித்து பேசவும் இல்லை. மாறாக, கருணா வாக்கினைப் பிரித்தார். அதனால் தோல்வியடைந்தோம் என்ற அளவில் விடயத்தைக் கடந்து விட்டார்கள்.

கடந்த பொதுத் தேர்தலில் அகில இலங்கை தமிழர் மகாசபைக் கட்சியில் போட்டியிட்ட கருணா அணியினர். 29,379 வாக்குகளைப் பெற்ற னர். கூட்டமைப்பு சுமார் நான்காயிரம் வாக்குகள் பின்னடைவோடு, 25, 255 வாக்குகளையே பெற்றது. 2015ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் கூட்டமைப்பு 45, 421 வாக்குகளை அம்பாறை யில் பெற்றது. இதன்மூலம் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் வெற்றி பெற்றார். ஆனால், 2020ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில், கூட்டமைப்பு 20.000 வாக்குகளை கருணாவிடம் இழந்தது. அத்தோடு. கருணாவால் சுமார் 10.000 பேரை மேலதிகமாக வாக்களிக்க அழைத்து வர முடிந்திருந்தது. கடந்த பொதுத் தேர்தலில் ஈ.பி.டி.பிக்கு கிடைத்த சில நூறுகளையும் சேர்த்தால் 55,000 தமிழ் வாக்குகள் அம்பாறையில் அளிக்கப்பட்டிருக்கின்றன.

2015 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலில் தமிழர் தேசம் முழுவதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை நோக்கிய அலை அடித்தது. கூட்டமைப்புக்கு மாற்றாக தங்களை முன்னிறுத்திய எந்தத் தமிழ்க் கட்சியாலும், அந்த அலைக்கு முன்னால் தாக்குப் பிடிக்க முடியவில்லை. அந்த அலையடித்த தருணத்தில்கூட அம்பாறையில் 45,000 வாக்குகளே அளிக்கப்பட்டன. ஆனால், அடுத்த தேர்தலில் மேலதிகமாக 10, 000 வாக்குகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. அதுவும் அந்த வாக்குகளை கருணா அணியால் சேர்க்க முடிந்திருக்கின்றது என்றால், அம்பாறை தமிழ் மக்கள் தெளிவான செய்திகளை சொல்ல முயன்றிருக்கிறார்கள் என்று அர்த்தம்.

கடந்த பொதுத் தேர்தல் முடிவுகள் வெளியாகிய பின்னர், புலம்பெயர் தேசத்தில் வசிக்கும் அம்பாறையைச் சேர்ந்த புலமையாளர் ஒருவர் இந்தப் பத்தியாளரோடு பேசினார். அப்போது.”... தமிழர் தாயகம் முழுவதும் தமிழ்த் தேசிய வாக்குகள் பிரிந்து தமிழ்த்தேசியம் சாரா சிங்களப் பேரினவாதக் கட்சிகளுக்கும் விழுந்திருக்கின்றன. யாழ்ப்பாணத்தில் அங்கஜனின் வெற்றியும். மட்டக்களப்பில் அமலின் (வியாழேந்திரன்) வெற்றியும் அதற்கான உதாரணங்கள். ஆனால், அம்பாறையில் கருணாவுக்கு கிடைத்த வாக்குகளை அவற்றோடு ஒப்பிட முடியாது. கருணா, ராஜபஷக்களின் விசுவாசி என்ற போதும், அம்பாறை மக்கள் மட்டக்களப்பிலிருந்து வந்த அவருக்கு சுமார் 30,000 வாக்குகளை அளித்திருக்கிறார்கள். அதுவும் இரண்டு மாதங்களுக்கும் குறைவான காலத்தில் முன்னெடுக்கப்பட்ட பிரச்சாரங்களினால் அது சாத்தியமாகியிருக்கின்றது. இந்த வாக்குகள் தமிழ்த் தேசியத்தின் வாக்குகள். கடந்த காலங்களில் சிங்கள காடையர்களின் தொல்லைகள், முஸ்லிம்களின் நெருக்கடிகளைச் சந்தித்து நின்ற தமிழ் மக்களின் வாக்குகள். தங்களுக்கு ஒரு சேவியர் (பாது காவலன்) வேண்டும் என்பதற்காக கருணாவிற்கு ஆதரவளித்திருக்கிறார்கள். கருணா தேர்தல் பிரச்சாரங்களில் முஸ்லிம் வெறுப்புப் பிரச்சாரத்தைக் கக்கினார். ஆனாலும் அவருக்கு மக்கள் வாக்களித்திருக்கிறார்கள். கல்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரச்சினை. பறிபோகும் தமிழர் நிலங்களை காக்க முடியாமை போன்ற கூட்டமைப்பின் கையாலாகத்தனத்தின் விளைவு தான், கருணாவின் எழுச்சியும், பிரதிநிதித்துவ இழப்பும். இதற்கு மக்களை நோக்கி யாரும் கை நீட்டக் கூடாது...” என்றார்.

தமிழ்த் தேசியக் கட்சிகளின் தோல்விகள். யாழ்ப்பாணத்துக்குள் சுருங்கிக் கொள்வதில் இருந்துதான் ஆரம்பிக்கின்றன. எந்த விடயத்தை எடுத்துக் கொண்டாலும் யாழ்மையவாத சிந்தனைகளைத் தாண்டி நின்று சிந்திப்பதில்லை. அதற்கு கட்சிகள் மாத்திரமல்ல. புலமையாளர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள், அரசியல் ஆய்வாளர்கள் என்று தங்களை முன்னிறுத்தும் தரப்பினர் என்று அனைவரும் அடக்கம். முள்ளிவாய்க்கால் முடிவுகளுக்குப் பின்னரான கடந்த பதினைந்து ஆண்டுகளில் பிரதான தமிழ்த் தலைவராக இரா. சம்பந்தன் இருக்கிறார். அவர், கிழக்கைச் சேர்ந்தவர்தான். ஆனால், அவரின் சிந்தனை என்பது யாழ். மையவாதம் மற்றும் கொழும்பு மேட்டுக்குடி சிந்தனைகளின் கலவையாகும். அவர் ஒரு போதும் கிழக்கு மக்களின் பிரச்சினைகளின் தீவிரம் குறித்து அவ்வளவு அக்கறை கொண்டவராக இருந்ததில்லை. தற்போது உடலளவில் அவர் தளர்ந்திருக்கின்றார். அதனால் திருகோணமலைக்கான தமிழர் பிரதிநிதித்துவ கடமைகள் ஆற்றப்படாமல் இருக்கின்றன. ஆனபோதும், அவர் அது தொடர்பில் அவ்வளவு அக்கறையை வெளிப்படுத்தவில்லை. அவர் இன்னமும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைப் பிடித்துக் கொண்டிருப்பதில் கவனமாக இருக்கிறார். அதேபோல, கடந்த பொதுத் தேர்தலின் பின்னரும், கூட்டமைப்புக்கு கிடைத்த ஒரேயொரு தேசியப் பட்டியல் பதவியையும், தமிழரசுக் கட்சியின் தலைவரான மாவை சேனாதிராஜாவுக்கு வழங்குவதற்காக வாதாடியவர் சம்பந்தன், மாவையும் வயது மூப்பினால் ஏற்படும் உபாதைகளோடு அல்லாடுபவர். அவரினால் அம்பாறைக்கான பிரதிநிதியாக மாவிட்டபுரத்திலிருந்து தொடர்ச்சியாக சென்றுவர முடியுமா. மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வைக் காண முடியுமா என்பவை பற்றியெல்லாம் சம்பந்தன் சிந்திக்கவில்லை. மாறாக, யாழ். மையவாத சிந்தனையின் தேவையை நிவர்த்திக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டின் பக்கத்தில் நின்றார். அதனால்தான். மாவைக்கு தேசியப் பட்டியல் வழங்கப்பட வேண்டும் என்றார். ஆனால், அவரின் கருத்துக்கள் உள் வாங்கப்படாமல் கலையரசனுக்கு தேசியப் பட்டியல் வழங்கப்பட்டது. அதற்குப் பின்னால், அம்பாறை மக்களை திருப்திப்படுத்தும் உத்தியும். உட்கட்சி அரசியலும் இருந்தது. அடுத்த பொதுத் தேர்தலில் அம்பாறையில் கருணா போட்டியிட்டாலும், அவரினால் கடந்த முறை பெற்ற வாக்குகளை பெற முடியுமா என்றால், அதற்கான வாய்ப்புக்கள் இல்லை.

> **அம்பாறை தமிழ் மக்கள் கடந்த பொதுத் தேர்தலில் வழங்கிய செய்தியை தமிழரசுக் கட்சி உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கட்சிகள் புரிந்து கொள்ள வேண்டும். வடக்கில் தமிழ்ப் பிரதிநித்துவத்துக்கு அவ்வளவு ஆபத்துக்கள் இல்லை. யார் எந்தக் கட்சியில் வெற்றி பெற்றாலும், அங்கு தமிழ் பிரதிநித்துவம் இருக்கும். ஆனால், அம்பாறை, திருகோணமலை போன்ற ஆண்டாண்டு காலமாக பௌத்த சிங்கள பேரினவாதத்தினால் கபளீரம் செய்யப்படும். தமிழர் தாயக நிலங்களில் பிரதிநித்துவம் என்பது கொஞ்சம் சறுக்கினாலே, இழக்கப்பட்டு விடும்.**

ஆனால். அம்பாறை தமிழ் மக்கள் கடந்த பொதுத் தேர்தலில் வழங்கிய செய்தியை தமிழரசுக் கட்சி உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கட்சிகள் புரிந்து கொள்ள வேண்டும். வடக்கில் தமிழ்ப் பிரதிநிதித்துவத்துக்கு அவ்வளவு ஆபத்துக்கள் இல்லை. யார் எந்தக் கட்சியில் வெற்றிபெற்றாலும், அங்கு தமிழ் பிரதிநிதித்துவம் இருக்கும். ஆனால், அம்பாறை, திருகோணமலை போன்ற ஆண்டாண்டு காலமாக பௌத்த சிங்கள பேரினவாதத்தினால் கபளீரம் செய்யப்படும். தமிழர் தாயக நிலங்களில் பிரதிநிதித்துவம் என்பது கொஞ்சம் சறுக்கினாலே, இழக்கப்பட்டு விடும். தமிழ்த் தேசிய அரசியலின் எழுச்சி. பௌத்த சிங்கள பேரினவாதத்துக்கு எதிராக நிகழ்ந்தது. அதுதான் இன்றும் அதன் ஆணி வேர்.

ஆனால், தமிழ்த்தேசிய அரசியல் என்பது யாழ். மையவாத அரசியலாக சுருங்கும் போது, தமிழர் தேசத்தின் பெரும்பகுதி அனாதையாக்கப்படும் அவலம் நிகழுகின்றது. அதனால்தான். அம்பாறை தமிழ் மக்கள் எதிர்நோக்கும் தனித்துவ பிரச்சினைகள் குறித்து அவ்வளவு அக்கறை வெளிப்படுத்தப் படுவதில்லை. இன்று கிட்டத்தட்ட அம்பாறையை “திகாமடுல்லவாக நினைத்து, பல தமிழ்த்தலைவர்கள் மறக்கத் தொடங்கிவிட்டார்கள். இதுதான். இப்போது திருகோணமலைக்கும் நிகழுகின்றது. தமிழர் தேசத்தின் தலைநகர் என்று திருகோணமலையை சொன்னால் மட்டும் போதாது. அங்கு தமிழர் இருப்பைக் காப்பாற்றுவதற்கான சிந்தனைகளை செயற்பாட்டுத் தளத்துக்கு நகர்த்த வேண்டும். மேடைப் பேச்சுக்களினாலும் உணர்வூட்டும் எழுத்துக்களினால் பெரிய மாற்றங்களை நிகழ்த்த முடியாது. ஏனெனில், பேரினவாதமோ தமிழர் நிலங்களை கபளீகரம் பண்ணுவதற்கான அரச இயந்திரத்தின் ஒத்தாசையோடும் பௌத்த பீடங்களின் நிகழ்ச்சி நிரல்களோடும் ஒவ்வொரு நொடியும் சிந்தித்து செயலாற்றிக் கொண்டிருக்கின்றது. அதனை எதிர்த்து நின்று. களத்தை வெற்றி கொள்வதற்கு அர்ப்பணிப்பான செயற்பாட்டுத் தலைமை வேண்டும். அதனை. தமிழ்த் தேசியக் கட்சிகள் பெரியளவில் வெளிப்படுத்துகிறார்கள் இல்லை. அந்தக் கட்சிகளின் ஒற்றை இலக்காக தேர்தல் வெற்றிகள் சுருங்கிவிட்டன.

திருகோணமலையும் அம்பாறையும் முழுவதுமாக இழக்கப்படும் சூழல் ஏற்பட்டுவிட்டது. இந்த நிலையை இன்று மட்டக்களப்பும். முல்லைத்தீவும். வவுனியாவும் எதிர்கொண்டிருக்கின்றன. அடுத்து அது மன்னாருக்கு பரவும். இறுதியாக யாழ்ப்பாணத்தையும் கபளீகரம் செய்வதோடு முடியும். யாழ்ப்பாணத்தைச் சுற்றி, தமிழ் மாவட்டங்களே இருக்கி



ன்றன. அதனால், நில ஆக்கிரமிப்பு என்பது அவ்வளவு இலகுவாக நடந்துவிட வாய்ப்பில்லை. அதுபோல, தமிழர் பிரதிநிதித்துவத்துக்கும் சிக்கல் இல்லை என்பதுதான், யாழ். மையவாத சிந்தனையாளர்கள், தமிழர் நிலத்தின் பெரும்பான்மையான நிலப்பகுதி குறித்தும், அவை எதிர்கொண்டிருக்கும் பிரச்சினைகள் குறித்தும் அவ்வளவு அக்கறையின்றி இருப்பதற்கான காரணமாகும். இன்றைக்கு எந்த அரசியல் முடிவு. எடுக்கப்பட்டாலும் யாழ்ப்பாணத்தில் இருந்துதான் எடுக்கப்படுகின்றது. ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் போட்டியிட வேண்டும் என்று பேசுவோரும், புறக்கணிப்புக் கோசத்தை முன்வைப்பவர்களும்கூட யாழ்ப்பாணத்தைத் தாண்டி சிந்திப்பதில்லை. இனமொன்றின் அரசியல் முடிவை, அந்தச் சனக் கூட்டம் பரவியிருக்கின்ற பகுதிகளில் கருத்துக் கேட்டு, வாதப் பிரதிவாதங்களை நடத்தி எடுக்க வேண்டும் என்ற எந்தவித பொறுப்பும் இல்லை. மாறாக, யாழ்ப்பாணத்தில் இருந்து கொண்டு தங்களுக்கு வாகான முடிவுகளை எடுக்கிறார்கள். அதற்கு சில புலம் பெயர் தரப்பினரின் ஒத்துழைப்பை பெற்றால் போதுமென்று நினைக்கிறார்கள். இந்த நிலை நீடித்தால், தமிழ்த் தேசிய அரசியலில் வீழ்ச்சி சொல்லிக்கொள்ள முடியாத அளவுக்கு இருக்கும். இன்றைக்கு யார் விரும்பினாலும் இல்லையென்றாலும் மட்டக்களப்பில் பிள்ளையானின் (சிவனேசத்துரை சந்திரகாந்தன் அரசியல் வெற்றியை யாரினாலும் புறந்தள்ள முடியாது. அவரின் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சிக்குப் பின்னால், சாதாரண மக்கள் மாத்திரமல்லர், தங்களை வெளிக்காட்டிக் கொள்ளவிட்டாலும் புலமையாளர்களும், புலம்பெயர்ந்த மட்டக்களப்பின் மக்களும் கணிசமாக இருக்கிறார்கள். அது. தமிழ்த் தேசியக் கட்சிகளின் தோல்விகளினால் நிகழ்ந்தது.

யாழ்ப்பாணத்தில் டக்ளஸ் தேவானந்தாவின் வெற்றியையும் மட்டக்களப்பில் பிள்ளையானின் வெற்றியையும் சில தரப்பினர் ஒன்றாக ஒப்பிடுகிறார்கள். ஆனால், இரண்டும் ஒன்றல்ல. ஏனெனில், ஈ.பி.டி.பி க்கான வாக்குகள் என்பது டக்ளஸின் காலத்துக்குப் பின்னால் கரைந்து விடும். இதுதான். தமிழ் ஆயுதக் குழுக்களாக இருந்து கட்சிகளாக மாறிய புளொட் ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகிவற்றுக்கான எதிர்கால நிலையும். ஆனால், பிள்ளையானின் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி மட்டக்களப்பில் தனி நபர் அடையாளத்தைத் தாண்டி தன்னையொரு கட்சியாக வளர்த்துக் கொண்டிருக்கின்றது. பிள்ளையான் இல்லையென்றாலும், அந்தக் கட்சியோடு கணிசமான மக்கள் இருப்பார்கள். இந்த வேறுபாட்டைப் புரிந்து கொண்டால் போதும், தமிழர் தாயகத்தில் ஒவ்வொரு பிரதேசத்தின தும் தனித்துவப் பிரச்சினைகளை அடையா ளம் கண்டு, அதற்கான செயற்திட்டங்களை வகுத்துச் செயற்பட வேண்டும். அதனைச் செய்யாமல், தொடர்ச்சியாக தமிழ்த் தேசியத்தின் பெயரினால் தமிழ்த் தேசியக் கட்சிகள் தப்பித்துக் கொள்ளலாம் என்று எண்ணக் கூடாது. அதைக் கட்சிகள் மாத்திரமல்ல. தமிழ்த் தேசியத் தரப்புக்கள் அனைத்தும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

தமிழ்த் தேசியத் தரப்புக்கள் முதலில் யாழ். மையவாத சிந்தனையில் இருந்து வெளிவந்து. "தமிழ்த் தேசிய நோக்கு நிலை"யை தமிழர் தேசம் சார்ந்து வடிவமைக்க வேண்டும். அது சமூக பொருளாதார கட்டமைப்பின் ஒவ்வொரு படி நிலையில் இருந்தும் நிகழ வேண்டும். அதுதான் தமிழ்த் தேசிய அரசியலை பலப்படுத்த உதவும். மாறாக, தேர்தல் அரசியலைப் பிரதானப்படுத்தி மாத்திரம் சிந்தித்தால், கடந்த தேர்தலில் கருணா செலுத்திய தாக்கம் மாதிரியான விடயங்களை, தமிழர் தேசத்தில் ஒவ்வொரு பகுதியும் எதிர்கொள்ள வேண்டி வரலாம். அப்படி தொடர்ச்சியாக நிகழ்ந்தால் தமிழ்த்தேசிய அரசியல் மெல்ல மெல்ல கரைய ஆரம்பிக்கும். அது, எதிர் காலத்தில் தமிழர் இருப்பை இல்லாமற் செய்து விடும். அதனைப் புரிந்துகொள்ளாமல் இன்று குறுகிய நலன்களில் அக்கறை கொண்டு கோட்டை விட்டுவிட்டு, எதிர்காலத்தில் தமிழ்த் தேசியத் தரப்பினர் புலம்பிப் பயனில்லை.


**அன்பான வாசகர்களுக்கு..!**

தேசியம் வாசகர்களுக்கு வணக்கம்.
எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.
அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம். பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்ப வேண்டிய முகவரி :

No. 27, Kannathiddy Road, Jaffna. | Tel : 021 222 7557
E-mail : thesiyamnews@gmail.com | Whatsapp : +94 76 567 3339


# தலைநிமிர் கழக யாழ் இந்துவின் மாற்றுக் குறையாத மன்னவன் !



– சிவப்பிரகாஷ் வயித்தீஸ்வரன் –

"மாபெரும் சபை தனில்
நீ நடந்தால் உனக்கு
மாலைகள் விழ வேண்டும் – ஒரு
மாற்றுக் குறையாத
மன்னவன் இவனென்று
போற்றிப் புகழ வேண்டும்"

திரைப்படப் பாடல் ஒன்றின் வரிகள் இவை. 2023 ஆம் ஆண்டு மே மாதம் பிற்பகுதி, ஒரு பெரிய சபையில், சுரேஷ் நடப்பதற்குப் பதில் நீண்ட துயிலில் கிடக்கிறான். மாலைகள் வந்து விழுகின்றன. அங்கிருப்போர் அவனைப் போற்றிப் புகழ்கிறார்கள். சொற்பூக்கள் சொரிகிறார்கள். மாற்றுக் குறையாத மன்னவன் இவன் என்று மனம் உருகுகிறார்கள்.

சிறு வயதிலிருந்து சுரேஷ் கால் வைத்த சபைகள் தான் வித்தியாசமே தவிர அவனுக்குக் கிடைத்த வரவேற்பு எப்போதும் ஒன்றே. ஏனென்றால், பாடசாலை விளையாட்டு மைதானம், அவன், மேற்கொண்ட படிப்பு, தேடிய வேலை, கற்றுக்கொண்ட ஏனைய கலைகள் போன்றவற்றை சபை என்று கருதினால், அங்கெல்லாம் முடி சூடா மன்னன் அவன். முக்கியமாக எதிரி இல்லா மன்னாதி மன்னன்.

சுரேஷ் பலவகையான விளையாட்டுகளுக்காக பல தடவை, பல மைதானங்களில், பல மட்டங்களில் நுழைந்திருக்கிறான். எப்போதும் வெற்றி வாகை சூடியே திரும்பி வந்திருக்கிறான். இங்கே என்ன சிறப்பு என்றால், சுரேசுடன் விளையாடியவர்கள், எதிரணியைச் சேர்ந்தவர்கள், பார்வையாளர்கள் என்று எவருக்கும் சுரேஷ் மேல் எரிச்சல், பொறாமை,கோபம், பகை எதுவுமே வந்ததில்லை.

அதற்கு மாறாக, அவர்கள் மனதில் இருந்ததெல்லாம் 'எப்படி சுரேஷ் போல தாமும் விளையாடலாம்' என்ற கேள்வியே. தன்னைச் சூழ்ந்தவர்களை எல்லாம் தன் ரசிகர்களாக மாற்றியது அவனுடைய சிறப்பியல்பு. அவனே அறியாமல் நடந்த ஆளுமைத் தொடுகையது.

பாடசாலை நாட்களில் வகுப்பறையை விட விளையாட்டு மைதானத்தில் அதிக நேரம் செலவிட்டவன். ஏன், நேரத்தை முதலிட்டவன் என்றும் சொல்லலாம். ஏனென்றால், அதற்கான பலனை தனக்காகவும், தனது அணி, பாடசாலை அல்லது கழகத்துக்காக நேர்த்தியாகக் கொண்டு வந்தவன். திறமைகளை கூர்மைப்படுத்தி செய்ததால் எல்லாவற்றிலும் பலன் கிடைத்தது.

பின்னர், ஒரு கட்டத்தில், எல்லா விளையாட்டுகளையும் தற்காலிகமாக நிறுத்தி கொழும்பில் மேற்படிப்பு படித்தான். அங்கும் பலர் அனுபவித்த உலகாயத இன்பங்களை உதறி தனக்கு எது மிக முக்கியம் என்பதில் தன் கவனத்தை நேர்நோக்கி செய்து தன் திறமையை நிரூபித்து பெருமைப்படக் கூடிய தொழில் பெற்று அமெரிக்கா சென்றான்.

புகைப்படம் எடுத்தல், ஓவியம் வரைதல், சமையல், சைக்கிள் ஓட்டுதல், மலையேற்றம் (Photography, Drawing and Painting, Cooking, Cycling, Trekking) என்று தன் மனதையும் உடலையும் ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் வைத்திருந்தவன். குடும்பத்துக்காகவும் தாராளமான நேரம் ஒதுக்கி வாழ்க்கையை சமநிலையாகக் கொண்டு போனவன்.

எப்போதும் ஒரே மாதிரியான சிரிப்பு, பல் வேறுபட்ட திறமைகளும் பொழுது போக்குகளும், எடுத்த வேலையில் கவனக் குவிப்பு, எவருடனும் பகைமை பாராட்டாமை என சுரேஷ் பழகிய அனைவரும் ஒரே கருத்தைக் கொண்டிருந்தமை தான் வியப்பும் சிறப்பும்.

ஒவ்வொரு வயது காலப் பகுதிகளிலும் அந்த நேரத்துக்கு மிகமுக்கியமான விஷயங்களில் தன் திறமையையும், கவனத்தையும் செலுத்தி தன் கடமையைச் சரிவரச் செய்தவன்.

2014 ஆம் ஆண்டிலிருந்து தன் பாடசாலை நண்பர்களை சந்திப்பதற்கான வாய்ப்புகளையும் தவறவிடாதவன். அந்தச் சந்திப்புகளில் அவனது பண்பையும் முதிர்ச்சியையும் நாங்கள் சிலாகித்துக் கொண்டு வரும் போது ஓரிரவு, பிள்ளைகளுக்குக் கதை சொல்லி உறங்க வைத்துவிட்டு தானும் உறங்க என்று போனவன் மேலுலகத்துள்ள சபைக்கு வீறு நடை போட்டு போய் விட்டான். அவனது வாழ்க்கையை எங்களுக்குக் கதையாக விட்டுச் சென்றுவிட்டான்.

# பொது வேட்பாளரும் ஏமாறும் சிவில் சமூகமும்!



தமிழ்த் தேசியக் கோட்பாட்டுச் சித்தாந்தத்தை நிலைநிறுத்தும் நோக்கில் தாயகம், தேசியம், தன்னாட்சி, சுயநிர்ணயம் எனும் நோக்கு நிலையில் தமிழர்களின் அடிப்படைக் கட்டமைப்பை வலிமைப்படுத்தி நிலைநிறுத்த வேண்டியது தமிழ்த் தேசியம் பேசுபவர்களின் தார்மீகக் கடமையாகும். இதை அடைவதற்கான இலக்கு நோக்கியே கடந்த 70 ஆண்டுகளாக மிதவாத அரசியலிலும் ஆயுத போராட்டத்திலும் பல முனைப்புகள் மேற்கொள்ளப்பட்டன. யாவற்றிலும் பின்னடைவும், தோல்வியும், அவமானமும், இழப்பும், இன அழிவுமே எஞ்சியன. இதில் 2009க்குப் பின்னர் நிலைமை மிகவும் வலுவிழந்து போனது. போய்க்கொண்டிருக்கிறது. அதைத் தடுப்பதற்கான நிலையான வழிமுறைகள் எவையும் நெறிமுறை சார்ந்து கட்டமைக்கப்படவில்லை. அதற்குரிய ஆக்கபூர்வமான, புத்திபூர்வமான முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இதற்கு தூய தமிழ்த்தேசிய நிலைப்பாட்டில் நின்று, நிலைக்கக்கூடிய வல்லாண்மையுள்ள தலைவரின்மையே அடிப்படைக் காரணம். 15 ஆண்டுகள் கடந்து போய்விட்டன. அந்தக் காலத்தோடு தமிழ்த் தேசியமும், தமிழர்தாயகமும், தமிழ்த் தேசிய உணர்வும் கரைந்து கொண்டே போகின்றன. இது பற்றி ஆழமான உணர்தல் இன்றி, அடுத்த தேர்தலில் எப்படி வெல்லலாம் என்றே தமிழ் அரசியல்வாதிகள் சிந்திக்கிறார்கள். அதை நோக்கியே நகர்கின்றனர். பதவி சண்டையாலும், உள்கட்சி முரண்பாடுகளாலும், பல கட்சிகளாகவும் பல பிரிவுகளாகவும் உருக்குலைந்து விட்டனர். பெரிய அண்ணன் பாத்திரத்தில் எவரும் இன்மையால்தான் கட்டுப்பாடோ. கட்டமைப்போ. கூட்டு பொறுப்போ இன்றி எல்லோரும் தலைவர்களாகிவிட்டனர். அது தான் இனத்தின் பெரிய சாபக்கேடு, தற்போதைய நிலையில் தமிழ் மக்களுக்குத் தலைமை தாங்கக்கூடிய நிலையில் எந்தத் தமிழ்க்கட்சியும் இல்லை. கட்சிகளுக்கும். கூட்டுக்களுக்கும் கூட உருப்படியான தலைவர்களும் இல்லை. மிக மிகப் பலவீனமான நிலையில் தமிழர்கள் நட்டாற்றில் தவிப்பது போல்தான் இன்றைய கள நிலைவரம் காணப்படுகிறது.

எனவே அம்பாறை மாவட்டம் கைநழுவி போய்விடும் நிலையில் உள்ளது. இதே நிலையில்தான் தற்போது திருகோணமலையும் எட்டிப் பிடித்து உள்ளது. யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பிலும் உள்ளக ரீதியாக குடியேற்றம், கட்டமைக்கப்பட்ட நில அபகரிப்பு, அரச திணைக்களங்களின் நெருக்கடி என பல்வேறு விதமான பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இதைப் பற்றி எல்லாம் கிஞ்சித்தும் கவலை கொள்பவர்களாகத் தமிழ்தேசிய அரசியல்வாதிகள் இல்லை.

ஆகவே, இவ்வாறான கையறு நிலையில் தமிழ்ப்பொது வேட்பாளர் என்பது நடைமுறைச் சாத்தியமா? ஆனால் இவ்விடயத்தில், இதன் அடிப்படைக் கொள்கைக் கோட்பாடுகளுடன் இப்பத்தியாளர் உட்பட தமிழ்த் தேசியத்தை நேசிக்கும் எவருக்கும் இரு கருத்து நிலை இருக்காது. ஆனால் மிகப் பலவீனமான களச் சூழலில் இந்த கோட்பாட்டுச் சித்தாந்தத்தை நடைமுறைப்படுத்தக் கூடிய வலிமை, வல்லமை அற்ற நிலையில் தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் உள்ளமையால் இதனை எப்படி மக்கள் மயப்படுத்துவது, அதற்கான நடைமுறைச் சாத்தியமான நிகழ்ச்சி நிரல் என்ன என்ற கேள்விகள் எழும்புகின்றன. 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற சகல தேர்தல்களிலும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வேண்டுகையை பெரும்பான்மையான தமிழ் மக்கள் ஏற்றுக் கொண்டனர். 2010 ஆம் ஆண்டில் ஜனாதிபதி தேர்தல், அதே ஆண்டில் நாடாளுமன்றத் தேர்தல், 2011 ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தல், 2012 ஆம் ஆண்டு கிழக்கு மாகாண சபை தேர்தல், 2013 ஆம் ஆண்டு வடக்கு மாகாண சபை தேர்தல், 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல், பின்னர் அதே ஆண்டில் நாடாளுமன்றத் தேர்தல் ஆகிய ஏழு தேர்தல்களிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கையை ஏற்றுத் தமிழ் மக்கள் வாக்களித்தார்கள். யுத்தத்துக்குப் பிந்திய நிலைமை என்பதனால் சம்பந்தனின் தலைமைத்துவத்தை ஓரளவுக்கு சாமானிய மக்கள் நம்பினார்கள்.

ஆனால், 2015 ஜனாதிபதித் தேர்தல் மூலம் ஏற்பட்ட நல்லாட்சி அரசின் இணக்க அரசியலாலும், நிழல் அமைச்சர் பதவியாலும் தமிழ்த் தேசிய நீக்கம் ஏற்பட்டது. புலி நீக்க அரசியலில் முனைப்புக் காட்டிய சம்பந்தன், தமிழ்த்தேசிய நீக்கத்தையும் ஏற்படுத்திவிட்டார். இவர்களின் இணக்க அரசியலால் எதுவும் தமிழர்களுக்கு நிகழவில்லை. இப்பத்தியாளர் உட்பட பலர் மக்கள் சலிப்படைந்து விட்டனர்.

**2015 ஜனாதிபதித் தேர்தல் மூலம் ஏற்பட்ட நல்லாட்சி அரசின் இணக்க அரசியலாலும், நிழல் அமைச்சர் பதவியாலும் தமிழ்த் தேசிய நீக்கம் ஏற்பட்டது. புலி நீக்க அரசியலில் முனைப்புக் காட்டிய சம்பந்தன், தமிழ்த்தேசிய நீக்கத்தையும் ஏற்படுத்திவிட்டார். இவர்களின் இணக்க அரசியலால் எதுவும் தமிழர்களுக்கு நிகழவில்லை.**

இவர்கள் மீது வைத்திருந்த புலிகளின் நீட்சி என்ற எண்ணமும் எதிர்கால நம்பிக்கையும் குறையத் தொடங்கின. தலைவர்கள் கம்பரலிய அபிவிருத்தி மாயைக்குள் அகப்பட்டுக் கொள்ள தொண்டர்களும், வாக்காளர்களும் பிற நலன் நோக்கி சிந்திப்பதில் தவறில்லைத்தானே...? தலைவர்கள் எவ்வழியோ மக்களும் அவ்வழியே என்னும் இணக்க வழிமுறையையும், அபிவிருத்தியும் வேலை வாய்ப்பும் என்று நலன் நாடல்களைப் பின்பற்றத் தொடங்கி விட்டனர். இதுவே, தமிழ்த் தேசியத்தின் மீது வலிமையாக இருந்த மக்களை இணக்க அரசியல் நோக்கி நகர்த்தியது.

இவர்கள்தான் ஆட்சியாளர்களின் இதயத்தில் இருக்கிறோம் என்றவர்கள். நீங்கள் இதயத்தில் இருந்தால் நாங்கள் இமையாக இருந்து இணக்கத்தை தொடர்வோம் என மக்கள் தீர்மானித்து விட்டனர். அதனால் தான் கடந்த தேர்தலில் வாக்குச் சிதறல்கள் ஏற்பட்டு பின்னடைவு நேர்ந்தது. ஆகவே தமிழருக்கு பெரும் துரோகம் செய்தது தமிழ்த்தேசிய கூட்டமைப்பே. தமிழ் மக்கள் அல்லர். மக்களைக் குறை கூறுவதில் அர்த்தமில்லை. வரும் தேர்தல்களிலும் இந்த நிலைமை மோசமடையலாம்.



– வி.எஸ்.சிவகரன் –

ஆகவே இவ்விதமான நிலையில் உள்ளகள யதார்த்தத்தை புரியாமல் பொது வேட்பாளர் என புறப்பட்டவர்களின் நிலைமை பரிதாபம், கடந்த ஒரு தசாப்தத்திற்கு மேலாக, தமிழ்த் தேசியக் கட்சிகளை ஐக்கியப்படுத்தவும், புதிய கூட்டு உருவாக்கவும் என இப்பத்தியாளர் “தடம் மாறுகிறதா தமிழ்த் தேசியம்?“ எனும் தொடங்கிய கூட்டங்கள் பல்வேறு விதமான தலைப்புகளிலும் தொடர்ந்து நடத்தப்பட்டன. உள்ளகக் கலந்துரையாடல்கள், இரகசிய சந்திப்புக்கள் என கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக என்னோடு சேர்ந்து பயணித்தவர்கள் - என் அன்புக்குரியவர்கள் - அவர்களின்று விமர்சனத்திற்குள்ளகியுள்ளமை எனக்கும் வேதனையே. எனவே பல்வேறு விதமான பட்டறிவு அனுபவங்களை பெற்றுக் கொண்டுள்ளோம்.

தமிழரசு கட்சியில் இருந்து கொள்கை ரீதியாக முரண்பட்டு வெளியேறினார்கள். 2015 இல் நாம் என்ன கூறி வெளியேறினோமோ அது இன்று தீர்க்க தரிசனமாக நிறை வேறியுள்ளது. ஆனால் தமிழ்த் தலைமைகள் இன்னும் சிந்திக்கவே இல்லை. எனவே தலைவர்கள் 2015க்கு பின்னர் இணக்க அரசியலில் ஈடுபட்டமையும், கிழக்கு மாகாணத்தில் கேவலம் அதிகாரம் அற்ற இரண்டு அமைச்சர் பதவிக்கு கூட்டாட்சி நடத்தியமையும், உள்ளூராட்சி மன்றங்களில் எந்தக் கொள்கையும் இன்றி பதவிக்காகப் பிசாசுடனும் கூட்டு சேருவோம் எனும் நிலைப்பாட்டை வெளிப்படுத்தியமையும் கண்டு அந்த அனுபவத்தில் இருந்து இவர்கள் எந்தப் பாடத்தையும் கற்றுக் கொண்டவர்களாகத் தெரியவில்லை. தமிழ்த்தேசியம் பேசிய கட்சிகள் எல் லாம் கடந்த காலத்தில் எம்மை எப்படி ஏமாற்றின என்பது இவர்களுக்கு நன்கு புரிந்த பின்னும் இவர்களை நம்பி பொது வேட்பாளர் விடயத்தில் களத்தில் இறங்கியது மகா தவறு. அதுவும் முரண்பட்டவர்களின் கூட்டின் ஆதரவுடன் முன் நகர்ந்தது அதைவிடத் தவறு. இவர்களில் சிலர் ஏனோ தானோ என்று கூட்டங்களுக்குச் சென்று வந்தனர். அதுவும் ஓர் ஊடக முதலாளி அழைத்ததால் ஊடகத்தைப் பகைக்க முடியாத கட்டத்தில் அந்த அச்சத்தினால் சென்றனர்.

இப்பொழுது அந்த உபயகாரர்களும் அமைதியாகிவிட்டனர் போல் தெரிகிறது. சில தனிநபர்களே இதனை முன்னெடுக்கின்றனர். ஆகவே இவர்களால் அரசியல்வாதிகளுக்கு எந்த அச்சமும் இல்லை. அதனால் இவர்களை இலகுவாக ஏமாற்றி விடுவார்கள். யாழில் நடைபெற்ற ஜனாதிபதி நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் உரையே இதற்குச் சான்று.

இவ்விடயத்தில் தமிழரசு கட்சி ஒருபோதும் இதற்கு பொது வேட்பாளர் திட்டத்துக்கு இணங்காது என்பது கடந்த 70 ஆண்டுகளாகக் கொழும்போடு அதன் மிதவாத அரசியலின் இணக்கப்பாட்டின் வெளிப்பாட்டை வைத்தே விடுதலை அரசியல் மீதான நலனை எவ்வாறு அது உற்றுநோக்கும் என்பதனை புரி

ந்து கொள்வதற்கு அதிக அறிவு அவசியம் இல்லை.
வட்டுக்கோட்டை தீர்மானத்திற்கு நிகரான கோட்பாட்டுத் தீர்மானத்தை முன்வைத்து இப்போது பொது வேட்பாளரை நிறுத்தப் போகின்றனர் எனக் கூறுகின்ற தரப்பினர், 13க்கு ஆதரவாக இந்தியாவுக்குக் கடிதம் எழுதின கட்சிகளோடும். இதில் 13ஐ ஆத ரித்த பத்தி எழுத்தாளர்களோடும். கூட்டாக இருப்பதும் இவர்களின் அடிப்படை நோக்கு நிலையில் எப்படி தடம் மாறாமல் பயணிக்க முடியும் எனும் கேள்வியை எழுப்பாமல் இல்லை.

ஆகவே இவர்களின் முயற்சியின் பிரகாரம் பொது வேட்பாளர் கணிசமான வாக்குகளை பெறவிட்டால் இவர்கள் முன்வைத்த அடிப் படை கோட்பாட்டு சித்தாந்தத்தை மக்கள் நிராகரித்து விட்டனர் என அரசும் ஏனைய தரப்புகளும் மிக இலகுவாக கூறி தமிழ் மக்களின் இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் வழமை போன்று பொருளாதார மேம்பாடே தீர்வு எனக் கூறி விடுவார்கள். இதில் உள்ள ஆபத்தை இவர்கள் புரியாதமை வேடிக் கையே.

போரிடுவதற்கு களமே முக்கியம். களம் சாத கமா என்பதை முதலில் உய்த்துணர வேண் டும். இந்தியா இந்த விடயத்தில் வழமை போன்று இரட்டை வேடம் போடுவதாகவே புரிகிறது. இராஜ தந்திரத் தரப்புகள் ஒருவித மாகவும் புலனாய்வு தரப்புகள் மற்றொரு விதமாகவும் இரண்டு பட்ட நிலையிலே இதனை அணுகுகின்றன என அறிய முடி கிறது. இது இந்தியாவின் வழமையான - வாடிக் கையான- செயற்பாடு ஆகும்.

இந்த விடயத்தில் இறங்கி, தமிழ் மக்கள் தோல்வி கண்டால் அல்லது தமிழருக்குப் பின்னடைவு ஏற்பட்டால, டெல்லி உளமாற ரசிக்கக் கூடிய மனோ நிலையிலேயே உள்ளது. ஏனெனில் கடந்த 15 ஆண்டுகளில் இந்திய மத்திய அரசு எந்த விதமான ஆக்க பூர்வமான நடவடிக்கைகளையும் தமிழர் களுக்கு செய்யவில்லை.

எனவே கடந்த ஒரு தசாப்தத்திற்கு மேலாக இந்தத் தமிழ் கட்சிகளை தமிழ்த் தேசிய அடிப்படை நலனில் அக்கறையோடும் உண் மையோடும் நேர்மையோடும் விசுவாசமாக பயணிக்க வைக்கலாம் எனும் நோக்கோடு எடுத்த முயற்சிகள் அத் தனையும் தோற்றே போயின. ஆகவே இனியும் இவர்களை நம்பியிராமல், இந்தப்பொது வேட்பாளர் விடயத்தில் முன் நிற்கின்ற சிவில் அமைப்பு கள் ஒன்று திரண்டு ஒரு புதிய அரசியல் கட் சியை உருவாக்கி, ஒரு சீர்திருத்தமான நோக்கில் தமிழர் அரசியலை கொண்டு செல் வதற்கு முனைய வேண்டும்.

இந்தியாவில் ஊழலுக்கு எதிராகப் போராடிய அண்ணாஹசாரே அணியில் இருந்த கெஜ் ரிவால், டெல்லியில் ஆட்சியைக் கைப்பற்றி பஞ்சாப் வரையும் வியாபித்து, நாட்டில் மூன் றாவது தேசியக் கட்சியாக வளர்ச்சி அடைந் தார். அதுவும் டெல்லியில் இந்திய சுதந்திரத் துக்காகப் போராடிய குடும்பத்தை சேர்ந்த வரும் பல தடவைகள் முதல்வராக இருந்த வருமான ஷீலா டிக்ஸிற்றைத் தோற்கடித்து பத்தில் ஒன்பது வீதம் என்னும் அடிப்படை யில் பெரு வெற்றி பெற்றார். இன்று மத்தியில் ஆளும் பா.ஜ.க. அவரைப் பழி வாங்கி வரு கிறது. அது வேறு விடயம்.

அன்று விளக்குமாறு சின்னத்தைக் கையில் எடுத்தவாறு டில்லியிலிருந்து ஊழல் அரசிய லைத் துடைத்தகற்றுகிறேன் என்ற ஆவெசத் தோடு கள மிறங்கி சாதித்தார் கெஜ்ரிவால். ஆனால் அவ்வாறான ஒரு களத்தைத் தயார் படுத்தி, நடைமுறைச் சாத்தியமான அரசி யலை அறத்தின் வழியில் கொண்டு செல்வ தற்கு வழி தேடுவதே உகந்தது. தமிழீழத் தேசியத் தலைவர் கூறியமை போல் பல தலைவர்களை நம்பினேன். பல தலைவர் களைத் தேடினேன், எல்லோரும் ஏமாற்றி விட்டனர். அதனால் நானே தலைவராகி விட்டேன்" என்ற கூற்றை முன்னுதாரண மாக்கிக் களத்துக்குத் தயாராக வேண்டும். அது ஒன்றே இவர்கள் கூறும் மாற்று, அரசி யல் மாற்றத்தையும் ஏற்படுத்தும். நோக்கு அரசியல் செயல்பாட்டுக்கு வித்திடும். யதார் த்த அரசியல் போன்றவற்றை செயற்படுத்த வும் நிலை நிறுத்தவும் அதுவே வாய்ப்பாக அமையும்.

இன்று ஆதாயச்சூதாடிகளாக கதிரைகளைச் சூடேற்றி, தொடர்ந்து தேர்தலில் வெற்றி பெற்று, தமிழ்த்தேசியம் எனும் கோட் பாட்டையும் அதன் நோக்கையும் அடை வதற்குரிய வழிகளை ஏற்படுத்தாமல் ஏமா ற்று அரசியல் செய்யும் அசகாய சூரர்களுக்கு மிகப்பெரிய சாட்டையடி கொடுக்கக் கூடிய தாக இருக்கும்.

பொது வேட்பாளர் விடயம் களத்துக்கு வரக் கூடிய வாய்ப்பு மிகக் குறைவு. ஏனெனில் சிவில் சமூகமாக கள அரசியல் பணிகளைச் செய்யக் கூடிய அளவுக்கு தொண்டர்களோ பணமோ அதற்குரிய ஏனைய வசதிகளோத ற்கு இல்லை. அர சியல் கட்சிகள் ஆதரிக்கக் கூடிய நிலையில் இல்ல. அவர்கள் தங்களின் நாடாளுமன்றத் தேர்தல் அரசியலில் எப்படி வெற்றி பெறலாம் என்கின்ற வியூகத்தையே இப்பொழுது வகுத்து வருகின்றனர். ஆகவே இனியும் தாமதிக்காமல் - இவர்களை நம் பாமல் - களத்தை எதிர்கொள்ள தயாராகுங் கள். காலம் ஒருபோதும் இடைவெளியை விட்டதில்லை. தலைவர்களைக் காலம் உருவாக்கிக் கொண்டே இருக்கும். ஆகவே புறப்படுங்கள் களம் நோக்கி கெஜ்ரிவால் போல தும்புக்கட்டையையோ. விளக்கு மாற்றையோ தூக்கிக் கொண்டு. தமிழ்த் தேசிய சிந்தாந்தப் புலத்தை அடைத்து நிற் கும் புல்லுருவிகள் அகற்றித் துடைத்து, தமிழ் தேசியத் தளத்தை சுத்தப்படுத்தி, அதில் தாயகம், தேசியம், தன்னாட்சி, சுயநிர்ண யம் எனும் நோக்கு நிலைகளை உறுதியாக நிலைநிறுத்துவோம்..

# நீங்களே பிரச்சினைகளை தீர்ப்பீர்கள் முல்லைத்தீவு மக்கள் நம்பிக்கை!

## ரணிலை புகழ்ந்தார் செல்வம் எம். பி.

முல்லைத்தீவு மக்களின் பிரச்சினைகளை உங்களால் தான் தீர்த்து வைக்க முடியும் என்ற நம்பிக்கை மக்களிடம் இருக்கிறது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் தெரிவித்தார் வன்னி மாவ ட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்.

மூன்று நாள் பயணமாக வடக்கு வந்திருந்த ஜனாதிபதி ரணில் புதுக்குடியிருப்பு மகா வித் தியாலயத்தில் நடந்த காணி உரித்து வழங் கும் நிகழ்வில் பங்கேற்றார். இங்கு உரை யாற்றிய செல்வம் அடைக்கலநாதன் எம். பி. பேசுகையில், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட முல் லைத்தீவு மாவட்டத்துக்கு ஜனாதிபதி வருகை தந்தையிட்டு மகிழ்ச்சியடைகின் றேன். இந்த மாவட்டத்தில் பல பிரச்சினை கள் உள்ளன. அவற்றை உங்களால்தான் தீர்த்து வைக்க முடியும் என்ற நம்பிக்கை மக்களிடம் இருக்கிறது.

இந்த மாவட்ட அபிவிருத்தி குழுவை உங் கள் தலைமையில் நடத்தி முல்லைத்தீவு மாவட்ட மக்களின் காணி உள்ளிட்ட பிரச்சி னைக்குத் தீர்வு வழங்க வேண்டும். காணி உறுதியில்லாத மேலும் பலர் உள்ளனர். சொந்த இடங்களுக்குச் செல்ல முடியாத நிலை உள்ளது. எமது மக்களின் அனைத்து பிரச்னைகளையும் தீர்த்து வைக்க நடவடி க்கை எடுக்குமாறு கேட்கின்றேன்- என்றார்.

# கல்லடி பாலத்திற்கு அருகில் உள்ள தோணா பகுதி அபகரிப்பு!

## தடுத்துநிறுத்திய எம்.பிக்கள்



மட்டக்களப்பு கல்லடி பாலத்திற்கு அருகில் உள்ள தோணா பகுதியினை சிலர் அபகரிப் பதற்கான தொடர்ச்சியான முயற்சிகளை முன்னெடுத்துவருகின்ற நிலையில் ஒரு குழுவினரால் குறித்த பகுதியில் பாதுகாப்பு கமராக்கள் பூட்டப்பட்டு வேலிகள் இடும் நட வடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

குறித்த விடயம் தொடர்பில் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் கோவிந் தன் கருணாகரம் ஆகியோரின் கவனத் திற்கு கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து குறித்த இடத்திற்கு சென்ற இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் மற் றும் பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் ஆகியோர் மட்டக்களப்பு மாநகரசபையின் உதவியுடன் குறித்த பகுதி யில் முன்னெடுக்கப்படும் காணி அபகரிப் பினை தடுத்து நிறுத்தும் செயற்பாடுகளை முன்னெடுத்தனர்.

அங்கு காணிகளை அடைப்பதற்காக கொண்டுவரப்பட்ட பொருட்கள் மற்றும் பாது காப்பு கமராக்கள் அகற்றப்பட்டு மாநகர சபையின் வாகனங்களில் ஏற்றப்பட்டு மாந கரசபைக்கு கொண்டு செல்லப்பட்டதுடன், இது தொடர்பில் காத்தான்குடி பொலிஸாருக் கும் அறிவிக்கப்பட்ட நிலையில் அங்குவந்த காத்தான்குடி பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்து வரு கின்றனர்.

குறித்த காணி தொடர்பான வழக்கு மட்ட க்களப்பு நீதிமன்றங்களில் நடைபெற்று வரும் நிலையில் இவ்வாறான செயற்பாடு கள் முன்னெடுக்கப்படுவதாக அங்கு தெரி விக்கப்பட்டது.

குறித்த பகுதியானது மட்டக்களப்பு பகுதிக ளில் ஏற்படும் வெள்ள நிலை மைகளின் போது வெள்ள நீர் வழிந்தோடுவதற்கான பிரதான பகுதியாக காணப்படுவதுடன் அது அடைக்கப்படுமானால் கல்லடி தொடக்கம் காத்தான்குடி வரையான பகுதி வெள்ளத் தில் மூழ்கும் அபாயம் காணப்படுவதாக அப் பகுதி மக்கள் தெரிவித்ததுடன், கடந்த கால ங்களிலும் இந்த பகுதியை அடைப்பதற்கு முன்னெடுக்கப்பட்ட பல முயற்சிகள் தடுத்து நிறுத்தப்பட்ட நிலையில் மீண்டும் முயற்சி கள் முன்னெடுக்கப்படுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## விவசாயத்தில் அரசாங்க...

கொண்டுள்ளது. உள்ளர் உற்பத்திகளுக் கான தகுந்த விலைவாய்ப்புகள் சந்தைப் படுத்தலுக்கான குறைவாக காணப்படுகின் றன. அதனால் பலர் நாளாரந்த கூலி பணத் தினை கொடுத்து விவசாயத்தை மேற்க் கொள்ள முடியாமல் விவசாய நிலங்களை வெறும் தரிசு நிலங்களாக விட்டுள்ள நிலை யும் காணப்படுகின்றது. அதுமட்டுமன்றி மழைவீழ்ச்சி குறைவாக கிடைக்கும் கார ணத்தினாலும் பல்வேறு பிரச்சனைகளை விவசாயிகள் எதிர்நோக்குகின்றனர். இது இயற்கையுடன் போராட வேண்டிய நிலையை காட்டுகின்றது. புதிய நவீன விவ சாய வளர்ச்சி களை அறிமுகம் செய்தாலும் உதாரணமாக மாதுளம் கன்று நடுதல், இந்திய மாதுளச்செய்கை, இந்திய மல்லி கைக் கன்று செய்கை மற்றும் சொட்டு நீர்ப் பாசனத்தினூடாக சில பயிர்ச்செய்கை முய ற்சிகள் இடம்பெற்ற போதிலும் அவை பெரி தளவில் விவசாயிகளின் வரவேற்பினை பெறவில்லை.

எனவே இச் சூழ்நிலையிலிருந்து எமது விவ சாயிகளை காப்பாற்றுவதற்கு முறையான திட்டமிடல் வேண்டும். முறையில் சந்தைப் படுத்தலுக்கான வாய்ப்பினை ஏற்படுத்தி கொடுக்கவும் வேண்டும். மற்றும் விவசாய துறையில் பட்டம் பெறுகின்றவர்களுக்கு விவசாய நிலங்களை அரசாங்கம் வழங்க வேண்டும். வன்னிப் பகுதியில் உள்ள பயிர்செய்கைக்கு உட்படாத நிலங்களை பல்கலைக்கழகத்திலிருந்து பட்டம் பெற்று வெளியேறுபவர்களுக்கு வழங்குவதோடு மானியங்களையும் கொடுத்து ஊக்குவிக்க வேண்டும். வளர்ந்த நாடுகளான கனடா, சோவியத் ரஷ்யா, இந்தியா போன்ற நாடுகள் விவசாய பட்டதாரிகளை மிகச் சரியான முறையில் பயன்படுத்துகின்றார்கள். ஆனால் எமது நாட்டிலோ, விவசாய பட்ட தாரிகள் வங்கிகளுக்கோ அல்லது வேறு பதவிகளில் குறிப்பாக அவர்கள் பட்டம் பெற்ற பாடத்திற்கு சற்றும் தொடர்பில்லாத பாடங் களை கற்பிக்கும் ஆசிரியர்களாகவோ தொழில் புரிகின்றனர். இலவச கல்வி திட்டத் தின் கீழ் பல்கலைக்கழகத்தின் இத்தகைய பாடப்பரப்பை கற்பவர்கள் இந்நாட்டிற்கு பய னுள்ளவர்களாக காணப்படாவிடின் இந்த நாடு மென்மேலும் வீழ்ச்சியடைந்து கொண்டே செல்லும். எனவே விவசாய விஸ் தரிப்பு தொடர்பாக அரசாங்கத்தை முழு வதும் நம்பி இருக்காது வடக்கு கிழக்கு தமி ழர்கள் ஒன்றிணைந்து மாற்று ஒழுங்கு களை கூட்டாக முயற்சிக்க வேண்டும். அது காலத்தின் கட்டாயமாகும் என்றார்.

# காணி அதிகாரம்..! இல்லை என்றால் மனிதன் உயிர் வாழும் உரிமை மறுக்கப்படும்



மாட்டின் ஜெயா – செயலாளர் – ஈழ மக்கள் ஐக்கிய முன்னணி

பேரரசுக் கொள்கையை கொண்ட பல சாம்ராஜ்ய நாடுகள் இன்னொரு நலிந்த நாடுகளின் மீது படையெடுக்கும் பொழுது தமது ஆதிக்கத்தைச் செலுத்துவதற்காக நிச்சயமாக அந்த நாடுகளின் நிலங்கள் மீதான அபகரிப்பு சார்ந்த கொள்கையானது வலிமையாகக் காணப்படும். இச்சட்டங்களின் மூலம் காணிச் சட்டங்களை உருவாக்கி, நில அபகரிப்புகளைச் செய்துள்ளனர் என்பது வெளிப்படை உண்மை. இவை அரச காணிகள் என்று கூறும் அளவிற்கு அந்நிய ஆதிக்கத்தினுடைய அரசியல் முறைமை நடைமுறையில் இருந்திருக்கின்றது.

உதாரணமாக, போர்த்துக்கேயரும் சரி, ஒல்லாந்தரும் சரி, ஆங்கிலேயர் என்றாலும் சரி இவர்களுடைய காணிச் சட்டங்கள் தத்தமது அரசாங்கம் அதனுடைய அரசுக்கும் மிக இலகுவாக கிடைக்கக் கூடியவாறான சட்டதிட்டங்களை செய்து தமக்குரிய குடியேற்ற காணிகளாக அவை எழுதப்பட்டிருக்கின்றது. அதுமட்டுமல்ல முடிக்குரிய காணி அந்தஸ்தினையும் பெற்றுக் கொடுத்திருக்கின்றது.

"பூர்வீகமானவை பின்னாளில் நாடு பிடிக்க வந்தவர்களினால் முடிக்குரிய அந்தஸ்தை எவ்வாறு பெற முடியும் என்ற கேள்வி எழுகின்றதல்லவா..!" இதனால் நாம் கூற வருவது என்னவென்றால், அந்நிய சக்திகள் விவசாய நிலங்களையும், மந்தை வளர்ப்பு நிலங்களையும் அபகரித்து, தங்களுடைய நலன்களுக்காக, தங்களுடைய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக பயன்படுத்திச் சென்றிருப்பதை நாம் அவதானிக்கலாம்.

பல்வேறு காணிச் சட்டங்களினூடாக உதாரணமாக தரிசு நிலச் சட்டம், பாழ் நிலச்சட்டம் என்னும் புதிய புதிய சட்டங்களை அறிமுகம் செய்து, சாதாரண மக்களினுடைய வாழ்வாதாரம் பறிக்கப்படும் அளவிற்கு காணிச் சட்டங்களை ஆயுதமாகப் பிரயோகித்திருக்கின்றனர்.

அதுமட்டுமல்ல, மண் வளத்துக்கு மிகவும் ஆபத்தான பயிர்களையும் பயிரிட்டு அதிக லாபமீட்டும் நோக்குடனும், குறுகிய நோக்குடனும் செயற்பட்டதையும் காணலாம்.

விவசாய நிலங்களைக் கையகப்படுத்தி வனவள, ஜீவராசிகள் பாதுகாப்பு என்ற அடிப்படையில் அவை சூறையாடப்படுவதையும் நாம் காணலாம். குறிப்பாக, வன்னி தேர்தல் மாவட்டங்களான மன்னார், முல்லைத்தீவு, வவுனியாவை உள்ளடக்கிய 6.580 சதுர கிமீ நிலத்தில் காணி உரிமங்களைக் கொண்ட மக்களின் நிலங்கள் வனவள, ஜீவராசிகள் பாதுகாப்பு என்ற போர்வையில் மக்களையும், புலம்பெயர் முதலீட்டாளர்களையும் பொருளாதார நடவடிக்கைகளுக்கான தடைகளின் ஊடாக மன உளைச்சலை உண்டுபண்ணி வெளியேற நிர்ப்பந்திக்கிறார்கள்..!

அதேபோல், கிழக்கில் தமிழர்களின் பூர்வீகமான "தரவை மேய்ச்சல் தரை" விவகாரமானது சிங்கள, பௌத்த மேலாதிக்க நடவடிக்கையாக வெளிப்பட்டு நிற்கின்றது. இன்றும் இம்மக்கள் தமது விலங்குகளை மேய்ச்சல் தரையில் விட்டு வரமுடியாத அவல நிலை தொடர்கின்றது. அவர்கள் உயிர் வாழ இந்த விலங்குகளே உள்ள நிலையில் அவ் உயிர்கள் வாள்வெட்டிற்கும், துப்பாக்கிச் சூட்டிற்கும் இலக்காகி மடிகின்றன..! இது எதை வெளிப்படுத்தி நிற்கின்றது..? " மனிதன் உயிர் வாழும் உரிமை" மறுக்கப்படுகின்றது.

மேய்ச்சல் தரைகளையும், சேனைத்தரைகளையும், விவசாய நிலங்களையும் இழந்து போன மக்கள், தொடர்ச்சியாக பொருளாதாரத்தில் படிப்படியாக வீழ்ச்சியடைவதைக் கூட நாம் தற்போது காணமுடிகிறது.

பொருளாதாரத்தின் மேல் விழும் அடியானது தனிமனிதனை, சமூகத்தை மறைமுகமாக வெளியேற்ற வழிகளைத் திறக்கின்றது. இதன் தாக்கம் வடக்கு, கிழக்கு மாகாண இளைஞர்களின் பாரிய புலம்பெயர்விற்கு வித்திட்டுள்ளது!

ஏற்கனவே, யுத்தத்தின் கோரத்தாண்டவங்களினாலும் அவற்றின் கொடூர கரங்களினாலும் இம்மண்ணிலே வாழ முடியாது என்பது முடிவாக்கப்பட்டு புலம்பெயர்ந்தவர்களின் நிலங்கள் திட்டமிட்ட தரிசு நிலங்களாகவே காணப்படுகின்றன.

பல்வேறு தேசங்களில் வாழும் நமது மக்கள் தமது தாயக பூமியை நேசித்த வண்ணம் இருப்பதோடு, அந்த நிலங்களுக்கு மீண்டும் உயிர் கொடுத்து காடடைந்து, புதர் மண்டிக் கிடக்கும் தேசமாக்கப்பட்ட தமது நிலங்களை மீண்டும் பயன்தரும் நிலங்களாக மாற்ற வேண்டும் எனும் கொள்கையோடும் வாஞ்சையோடுமே வாழ்கின்றனர்.

"40-45 வருடங்கள் யுத்தமும் அதன் தாக்கமும் உள்ள மண்ணில் காடுகளும், புதர்களும் மண்டிக்கிடக்கும்..! அதனை வன வளத் துறையினருக்கான இடமாக அடையாளமிடுவதும், ஆக்கிரமிப்பதும் எந்த வகையில் நியாயமாகும்..?"

ஆனால், மறுபக்கமாகப் பார்க்கின்ற பொழுது 13ஆம் சீர்திருத்தத்தில் காணியும் காணியமர்வும் பற்றி நோக்கும் பொழுது, முடிக்குரிய காணியும் காணிக்குடியேற்றமும் தொடர்ந்து மத்திய அரசுக்குரியதாக்கப்பட வேண்டும் என்றும், முடிக்குரிய காணியானது ஒதுக்கிய விடயம் ஒன்று தொடர்பில் மாகாணத்தில் அரசாங்கத்தின் நோக்கங்களுக்காக தேவைப்படும் பொழுது, முடிக்குரிய காணி அவ்விடத்தை ஆளுகின்ற சட்டங்களுக்கு இணங்க மாகாண சபையைக் கலந்தாலோசித்து, அரசாங்கத்தினால் பயன்படுத்தப்படலாம் என்றும், குறிப்பிட்டுக் காணி அதிகாரம் மாகாண சபையிடம் இருந்து மத்திய அரசிடம் சிறைப்பட்டுக் கொண்டது.

ஜனநாயக முறை வளர்ச்சியடைந்த தற்போதைய நிலையில் மிக நாகரீகமாக காணி அபகரிப்பானது செய்யப்படுவது மிகவும் வேதனைக்குரிய ஒன்றாகக் காணப்படுகின்றது. அரச காணிகள் மத்திய அரசுக்கு உரித்தாதல் வேண்டும் என்றே யாப்பில் கூறப்பட்டுள்ளது. ஆனால், காணிகளைப் பயன்படுத்தும் உரிமை மாகாண சபைகளுக்கு உரியது என்றும் கூறப்பட்டது. இது அவ்வாறு இருந்த பொழுதும், மத்திய அரசின் கொள்கைகளுக்கு ஏற்பவே மாகாண சபைகள் காணிகளை பயன்படுத்த முடியும். அது மட்டுமல்ல, மத்திய அரசின் தேவைக்கேற்ற காணிகளை அது சுவீகரித்துக் கொள்ளலாம் எனவும் இங்கே குறிப்பிடப்பட்டுள்ளது.


விவசாய குடியேற்றங்கள் மத்திய அரசின் கொள்கைகளுக்கு ஏற்பவே திட்டமிட்டு உருவாக்கப்படுவதோடு, ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளுக்கான கொள்கைகளையும் இந்த மத்திய அரசு தீர்மானிக்கும் என்பது 13ஆம் சீர்திருத்தத்தின் ஊடாக வழங்கப்பட்ட காணி அதிகாரங்கள் எழுதப்பட்டு மீண்டும் பறிக்கப்பட்ட நிலையிலையே அது காணப்படுகின்றது..

மேலும் நாம் நோக்குகின்ற பொழுது மாகாண சபைகளானது காணிச் சட்டங்கள் நடைமுறை சார்ந்த பணிகளையே மேற்கொள்வதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. மத்திய அரசு காணி தொடர்பான அனைத்து அதிகாரங்களையும் பறித்துக் கொண்டு தேசிய காணி ஆணை குழுவின் கீழ் இவற்றை ஒருங்கிணைத்து தேசிய காணி ஆணைக் குழுவையும் மத்திய அரசின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்திருப்பது மத்திய அரசின் மேலாதிக்கத்தையே வெளிப்படுத்துகின்றது. இறுதியில் தேசிய காணி ஆணைக்குழுவினால் உருவாக்கப்பட்ட தேசிய கொள்கைகளைக் கருத்திற் கொண்டு, மாகாண சபைகளினால் அவை பிரயோகிக்கப்பட வேண்டும். இவ்வாறு மாகாண சபை முறை பல இடர்பாடுகளைத் தன்னகத்தே கொண்ட மத்திய அரசவலுக்கு விப்பாகவே தோற்றமளிக்கின்றது.

எனவே, இதுவரை காணி சார்ந்த எந்த அதிகாரமும் மாகாண சபைகளுக்கு வழங்கப்படவில்லை. அது மட்டுமல்ல, இவ்வதிகாரங்களை நடைமுறைக்கு கொண்டு வரவும் அரசு முயற்சிக்கவில்லை. பேரினவாத சக்திகள் இதனை எதிர்க்கும் என்ற தமது அரசியல் இலாபங்களுக்காக ஒருபக்க சிந்தனையில் செயலாற்றுகின்றது.

வடக்கு, கிழக்கு பிரதேசங்களை பூர்வீகமாக கொண்ட எமது மக்கள் அரசியல் பொருளாதார துறைகளில் தம்மை முன்நகர்த்திச் செல்வதற்கு பதின்மூன்றாம் சீர்திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டும் வழங்கப்படாதிருக்கின்ற காணி அதிகாரங்கள் உடனடியாக எமது மக்களுக்கு நடைமுறைப்படுத்த வேண்டும் என்று நாம் உறுதியான அழுத்தங்களைக் கொடுத்து எமக்கான காணி உரிமைகளை மீட்போம்.

# கடற்றொழிலாளர் பிரச்சினை யாழில் கலந்துரையாடல்!



வடக்கு மாகாண கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அரசாங்கம் கொண்டுவரவுள்ள மீன்பிடி சட்டதிருத்த வரைவு சம்பந்தமாக வடக்கின் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆலோசனைகளையும், கருத்துக்களையும் கேட்டறியும் முகமாக கலந்துரையாடல் யாழில் உள்ள தனியார் விடுதியொன்றில் கடந்த சனிக்கிழமை நடை பெற்றது.

வட மாகாண கடற்றொழிலாளர் இணையம் மற்றும் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் இந்தக் கலந்துரையாடல் நடை பெற்றது. இதன் போது 10 கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றும் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் வழங்கப்பட்டது.

வடக்கின் 4 மீன்பிடி மாவட்டங்களை சேர்ந்த மீனவர் பிரதி நிதிகளும் தமது மாவட்டம் சார்ந்த பிரச்சினைகளை முன் வைத்தனர். அத்துடன், தமது பிரச்சினைகள் தொடர்பில் தொடர்ச்சியாக பாராளுமன்றில் பேச வேண்டும் என்ற கோரிக்கையும் மீனவ பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், செ.கஜேந்திரன் ஆகியோர் பங்கேற்றனர். செல்வம் அடைக்கலநாதன், எம்.ஏ.சுமந்திரன், அங்கஜன் இராமநாதன் ஆகியோர் தம் சார்பில் பிரதிநிதிகளை அனுப்பி வைத்திருந்தனர்.

# ஒரு நாட்டில் இரு வேறு சட்டங்களா!

## காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கம் கேள்வி

யுத்த காலத்தில் இராணுவத்திடம் எமது பிள்ளைகளை எம் கையால் விசாரணைக்கு என ஒப்படைத்தோம். அவர்கள் காணாமல் ஆக்கப்பட்டு இன்றுவரையில் எமக்கான நீதி கிடைக்கப்பெறவில்லை என கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கிளிநொச்சியில் இடம் பெற்ற ஊடக சந்திப்பொன்றில் கிளி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவி சார்பில் கதிர்காமநாதன் கோகிலவாணி இதனைத் தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்.

கிளிநொச்சிக்கு விஜயம் செய்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வருகைக்கு எதிர்ப்பு ஒன்றினை தெரிவித்து எதிர்ப்பு போராட்டம் ஒன்றை நிகழ்த்த திட்டமிட்டிருந்தது. ஆனால் அந்த போராட்டத்திற்கு நீதிமன்ற தடை உத்தரவு விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த யுத்த காலங்களில் உண்ண உணவின்றி உப்பு கஞ்சி குடித்து உயிரை காத்துகொண்டோம். அதனை சர்வதேசத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் எடுத்துக் காட்டும் முகமாக மே 18 முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டு வந்தது. குறித்த நினைவுக் கஞ்சிகளை இராணுவம் மற்றும் பொலிஸார் காலால் தட்டி சுகாதார கேடு என பலரை கைது செய்துமுள்ளனர்.

ஆனால் இன்று நாடு பூராகவும் வெசாக் பெருநாளை கொண்டாடி வருகின்ற போதிலும் இதுவரையில் எந்தக் குழப்பங்களும் இல்லை. அப்படி என்றால் தமிழருக்கு ஒரு சட்டம் சிங்களவருக்கு ஒரு சட்டமா? என கேள்விகள் எழுந்துள்ளதாகவும் இதன் காரணங்களுக்காகவே ஜனாதிபதியின் வருகையை எதிர்த்து சர்வதேச நாடுகளுக்கு உணர்த்தும் வகையில் ஊடகங்கள் வாயிலாக இதனைச் சுட்டிக்காட்டுகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

## ரணில் – விக்கி சந்திப்பு...

கடந்த சனிக்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் பாராளுமன்ற உறுப்பினர் திரு.விக்னேஸ்வரனின் வாசஸ்தலம் சென்று சந்தித்தது குறிப்பிடத்தக்கது. இந்த சந்திப்பு தொடர்பாக விக்னேஸ்வரன் எம்.பி பல்வேறு கருத்துக்களைக் கூறினாலும் ஜனாதிபதி ரணிலின் தந்திரத்திற்கு பலியாகிவிட்டார் என்றே கூற வேண்டும்.

விக்னேஸ்வரனைப் பொறுத்தமட்டில் ரணில் உடனான அவரின் அரசியல் உறவு என்பது தமிழர்களின் கடந்த கால அரசியல் வரலாற்றில் ரணிலின் வகிபாகம் என்ன? அவை எப்படியான விளைவுகளை எல்லாம் ஏற்படுத்தியது என்பதைக் கூர்ந்து கவனிக்காமையும், ரணிலினுடைய நரித்தந்திரங்கள் குறித்து அவர் கற்றுக் கொள்ளத் தவறிவிட்டார் என்பதும் புலனாகின்றது.

இலங்கையினுடைய கடந்த கால நீதியரசர் என்பதனாலும், தெற்கு சிங்களவர்களின் தடவிக் கொடுக்கும் அரசியலை சுமந்தவர் என்ற வகையிலும் வடக்கு, கிழக்கு தமிழர்கள் அறிந்திருந்த ரணில் பற்றிய யதார்த்த பூர்வ உண்மைகளை விக்னேஸ்வரன் அறிந்திருக்கவே! வாய்ப்பில்லை.

இலங்கையின் இனச்சிக்கலுக்கு காரணமான சூத்திரதாரிகளில் ஒருவராக கருதப்படும் ரணிலுக்கு செங்கம்பளம் விரிப்பதை ஈழத் தமிழர்கள் அறியாத ஒரு புதுப் புரட்சியாக விக்னேஸ்வரன் கருதுகின்றார். ஆனால் சிங்கள பௌத்த பேரினவாதத்தையும், ரணில் போன்ற இனவாதிகளையும் கண்டு பழந்திண்டு, கொட்டை போட்ட ஆயுதப் புரட்சி இயக்கங்களின் தலைவர்களே இன்று தமிழ் கட்சிகளின் தலைவர்களாக இருக்கின்றார்கள்.

ஆக, அவர்களால் அரசியலில் முன்னிறுத்தப்பட்ட விக்னேஸ்வரன் இவற்றையேல்லாம் உணர மறுக்கின்றாரா? அல்லது அவருக்கு புரியவில்லையா? இருப்பினும் தமிழ் அரசியல் கட்சிகளிடமிருந்து விக்னேஸ்வரனை தனிமைப்படுத்தும் திட்டத்தில் ஜனாதிபதி ரணில் வெற்றி கண்டுள்ளார் என்று தான் கருத முடியும்.

இந்த நேரத்தில் நாம் ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம் ரணில் பற்றி குறிப்பிட்டதையும், விடுதலை புலிகள் ரணிலை ஏன் தோற்கடித்தார்கள் என்பதையும் கடந்த கால வரலாறுகளாக மட்டுமின்றி சமகாலத்தில் தொடரும் சிங்கள பேரினவாதத்தின் அரசியல் நீட்சியாகவும் தமிழர்கள் அனைவரும் கருத்தில் கொள்ள வேண்டும்.

மேலும் தமிழ்த் தேசிய அரசியல் பரப்பிலிருந்தும், தமிழ் அரசியல் கட்சிகளிடமிருந்தும் திரு.விக்னேஸ்வரன் ஒதுக்கப்படுவது என்பது சமகாலத்தின் யதார்த்த உண்மையாகும். மீண்டும் சிங்கள பேரினவாதம் பிரித்தாலும் தந்திரத்தில் வெற்றி கண்டுள்ளது என்றே கூற வேண்டும்.

## ஈழத் தமிழர் விடயத்தில்...

இது தொடர்பாக அவர் வெளியிட்டு ள்ள அறிக்கையில், "இஸ்ரேலுக்கும். ஹமாஸ் அமைப்புக்கும் இடையிலான போரில் 35 ஆயிரத்துக்கும் கூடுதலானவர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ள நிலையில், அதற்கு காரணமான இஸ்ரேல் ஆட்சியாளர்கள் மீது பன்னாட்டு நீதிமன்றங்களில் வழக்குகள் தொடுக்கப்பட்டு, விசாரணைகள் தொடங்கியுள்ளன. பாலஸ்தீன மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்கு நீதி வழங்க மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த நடவடிக்கைகளை வரவேற்கும் அதே நேரத்தில் இதே நீதி ஈழத்தமிழர்களுக்கு வழங்கப்படாதது ஏன்? என்ற வினாவும் எழுந்திருக்கின்றது.

ஐ.நா அமைப்பின் கீழ் செயற்பட்டுவரும் போலந்து நாட்டின் தி ஹேக் நகரில் உள்ள பன்னாட்டு நீதிமன்றத் தில் இஸ்ரேல் ஆட்சியாளர்கள் மீது இனப்படுகொலை வழக்கை தென்னா பிரிக்க அரசு அண்மையில் தொடர்ந்து நடத்தி வருகிறது.

மேலும், போர்க்குற்றங்கள். மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள், இனப்படுகொலை ஆகிய அட்டூழியக் குற்றங்களுக்கு எதிரான விசாரணைகளும் பன்னாட்டு நீதிமன்றங்களில் தொடங்கப்பட்டிருக்கின்றன.

இஸ்ரேல் நாட்டின் போர்க்குற்றங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படுள்ள நட வடிக்கைகள் அனைத்தும் வரவேற்கத்தக்கவை. அதே நேரத்தில் இலங்கையின் ஒன்றரை லட்சம் அப்பாவித் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்ட விவகாரத்தில் அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட உலகின் மனித உரிமை பேசும் நாடுகள் கடந்த 15 ஆண்டுகளாக எந்த நடவடிக்கையும் எடுக்காமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது ஏன்?

இலங்கையில் நிகழ்த்தப்பட்ட போர்க் குற்றங்களுக்கு நீதி கிடைக்கவில்லை என்று ஐ.நா மனித உரிமைகள் ஆணையம் 17.05.2024 அன்று வெளியிட்ட அறிக்கையானது போர்க்குற்றவாளிகளை தண்டிக்கும் கடமையை இலங்கை சரியாக செய்யவில்லை என்பதை வெளிச்சம் போட்டுக்காட்டியுள்ளது. அதனால், இலங்கை செய்யத் தவறியதை உலக நாடுகள் தான் செய்ய வேண்டும் என்று கூறியுள்ளது.

எனவே ஈழத்தமிழர்களுக்கு நீதி பெற்றுத் தரும் கடமை உலக நாடுகளுக்கு, குறிப்பாக, இந்தியாவுக்கு உள்ளது. இலங்கை சிக்கலில், இந்திய அரசு இப்போது மேற்கொண்டுள்ள நிலைப்பாடு மாறினால் ஈழத்தமிழருக்கு இனியாவது நீதி கிடைக்கும் என அவர் தெரிவித்தார்.

## சிறிலங்கா உள் விவகார...

இலங்கையின் நிலைவரம் குறித்து அமெரிக்க அரசாங்கம் முன்னெடுக்கவேண்டிய விடயங்கள் தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

தமிழர்களுக்கு எதிராக பௌத்த பிக்குகளால் தூண்டப்பட்ட ஒடுக்குமுறைகளைத் தடுப்பதற்கு இலங்கை அரசாங்கம் தவறியிருக்கிறது.

இலங்கை அரசாங்கம் மத ரீதியில் தமிழர்களை தொடர்ச்சியாக ஒடுக்கியும், அச்சுறுத்தியும் வருவதுடன் அவர்களது வழிபாட்டுத் தலங்களுக்குள் பிரவேசிப்பதற்கும் அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு முழுவதும் பயங்கரவாதத் தடைச்சட்டம், சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயச் சட்டம் ஆகியவற்றின்கீழ் நபர்களைப் பலவந்தமாகத் தடுத்து வைத்ததன் ஊடாக இலங்கை அரசாங்கம் மதச்சுதந்திரத்தை வெகுவாக மட்டுப்படுத்தியது.

அதேவேளை - கடந்த ஆண்டு முழுவதும் தொல்பொருள் திணைக்களமானது பௌத்த விகாரைகளை நிர்மாணிப்பதற்காக வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகளை ஆக்கிரமித்துள்ளது.

அந்தவகையில் மதச்சுதந்திரத்துடன் தொடர்புடைய விவகாரத்தில் இலங்கையை விசேட கண்காணிப்புப் பட்டியலில் சேர்த்தல், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குமாறு அல்லது சர்வதேச நியமங்களுக்கு அமைவாகத் திருத்தியமைக்குமாறு இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் பிரயோகிக்க வேண்டும். இலங்கையில் மதச்சுதந்திரம், கருத்துக் கோரல் உள்ளிட்டவற்றை உறுதிசெய்ய வேண்டும் என்றுள்ளது.

## தமிழர் தரப்பு பொது,,,

வடக்கு - கிழக்கிலிருந்து தமிழ்ப் பொதுவேட்பாளரை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்துவது தொடர்பாக நீண்ட உரையாடல்களை நாங்கள் நடத்தியிருப்பதுடன் இந்த முடிவு கொள்கை ரீதியில் ஒரு சரியான முடிவு என்பதையும் ஏற்றிருக்கின்றோம்.

சிவில் சமூக அமைப்புகளும் இதுவொரு சரியான முடிவென்பதை ஏற்றிருக்கின்றன. தமிழ்ப் பொதுவேட்பாளர் தொடர்பில் மிக விரைவில் நாங்கள் திட்டவட்ட மான முறையில் ஒரு தெளிவான முடிவை எடுத்து மக்களுக்கு அறிவிப் போம் என ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பேச்சாளர் சுரேஷ்பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் கிளிநொச்சி மாவட்ட நிர்வாகத் தெரிவு கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் இடம்பெற்றது. கூட்டத்தின் நிறைவில் ஊடகங்களுக்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்மக்கள் எவ்வாறான பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றார்கள்? என்பதைச் சிங்கள அரசியல் தலைவர்களுக்கு அறிவிப்பதற்கும், சர்வதேச இராஜதந்திரிகள் புரிந்து கொள்வதற்குமாக நாங்கள் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவது அவசியம்.

ஜனாதிபதி தமிழ்ப் பிரதிநிதிகளுடன் நடத்தும் பேச்சுகள் அனைத்தும் இதுவரை காலமும் வெறும் பேச்சுக்களாகத்தான் இருந்திருக்கின்றன.

பேச்சுக்களுக்கு மேலாக நடைமுறையில் அவர் சொல்பவற்றைச் செய்வாரெனில் அது சிறப்பானதாக அமையும் என்றார்.

## சிங்களத் தலைவர்களின்...

ஈழத்தமிழர்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வை அதிகாரபூர்வமாக வழங்குவதற்குரிய சந்தர்ப்பங்களை தமிழ்மக்கள், சிங்களத் தலைவர்களுக்கு பலமுறை வழங்கியிருந்தும் அவர்கள் அவற்றை சரிவரப் பயன்படுத்த முன்வராமைக்கு, இனமேலாதிக்க மனோநிலையே காரணம். அதற்கு ரணிலும் விதிவிலக்கல்ல என நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கௌதாரிமுனை மக்களைச் சந்தித்து சமகால அரசியல் நிலைவரங்கள் குறித்தும், அந்த மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் குறித்தும் கலந்துரையாடும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

வடக்குக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவது சாத்தியமற்றதென குறிப்பிட்டுள்ளதை மேற்கொள்காட்டி கருத்துரைத்த சிறீதரன், தமிழர்களுக்கான அரசியல் தீர்வை வழங்குவதற்கு பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த வேட்பாளர்கள் எவரும் தயாரில்லை. சிங்களத் தலைவர்கள் ஈழத்தமிழர்களை எடுப்பார் கைப்பிள்ளைகளாக பயன்படுத்த நினைக்கும் மனோநிலையிலிருந்து வெளிவராத வரை இந்த நாட்டில் இன நல்லிணக்கம், சமத்துவம், சகோதரத்துவம் என்பவைக்கு சாத்தியமேயில்லை - என்றார்.

# தமிழர்களை ஒதுக்கப்பட்ட இனமாக பார்க்கும் அரசாங்கம்:

## கருணாகரம் (ஜனா) எம்.பி குற்றச்சாட்டு

தமிழர்களை ஒதுக்கப்பட்ட மற்றும் ஒடுக்கப்பட்ட இனமாகவே இந்த நாட்டின் அரசாங்கம் பார்ப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் 26.05.2024 இடம்பெற்ற தேற்றாத்தீவு வெற்றி விநாயகர் விளையாட்டுக் கழகத்தின் 25ஆவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டத்தில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

"ஜனாதிபதித் தேர்தல் நெருங்குவதால் தமிழ் மக்கள் சிந்தித்துச் செயற்படவேண்டிய ஒரு காலகட்டத்திலே இருக்கின்றோம்.

ஏனெனில் கடந்த கால ஜனாதிபதிகள், தமிழ் மக்களின் புரையோடிப்போயுள்ள இனப் பிரச்சனைக்கு ஒரு நிரந்தரமான அரசியல் தீர்வை வழங்கவில்லை.

இந்த விடயத்தில் தான் தமிழ் மக்கள் எமது ஒற்றுமையையும் பலத்தையும் நிரூபிக்க வேண்டிய தேவையில் இருக்கின்றோம்" எனத் தெரிவித்துள்ளார்.

# தமிழரசுக் கட்சியின் மாநாடு வழக்கு: இரு தரப்பாக பிரிந்த சிறீதரன் - மாவை




இலங்கை தமிழரசுக் கட்சியின் மாநாடு தொடர்பான வழக்கில் நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரனும், மாவை சேனாதிராஜாவும் வெவ்வேறு சட்டத்தரணிகளுடன் நீதிமன்றில் முன்னிலையாகியதாக எம். ஏ சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடகமையத்தில் 27.05.2024 இடம்பெற்ற சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அவர், சிறீதரன் மற்றும் மாவை சேனாதிராஜா இடையே வெவ்வேறு நிலைப்பாடுகள் காணப்படுவதாகவும் குற்றம் சுமத்தியுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,


""கட்சியின் சார்பாக 7 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அதில் நான் உள்ளிட்ட மூவர் ஒரு நிலைப்பாட்டுடன் செயற்படுகின்றோம்.

ஆனால் மீதமுள்ள 4 பேரும் இரு தரப்பாக பிரிந்து வெவ்வேறு நிலைப்பாடுகளை கொண்டு செயற்படுகின்றனர்.

இதனை மத்திய செயற்குழு கூட்டத்தில் எடுத்துரைத்தேன். கட்சியின் முன்னணி அங்கத்தவர்கள் யாப்பை தெரியாதது போல் நடந்து கொள்வது தொடர்பிலும் விளக்கமளித்தேன்." என்றார்.











ஸ்ரீதரன் தமிழினி
ஊடகக்கற்கைகள் துறை
மூன்றாம் வருடம்
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்



# சிகிரியா (பயணக்கட்டுரை)

வரலாற்றுக் கலாச்சாரம் மற்றும் இயற்கையில் ஆர்வம் உள்ளவர்களில் நானும் ஒருத்தி அந்த வகையில் இலங்கையின் தனித்துவங்களில் ஒன்றான இயற்கை வளங்கள், குளங்களினால் நிறைய பெற்ற அந்த மலையினை ஒரு முறையாவது பார்க்க வேண்டுமென்று எண்ணம் என் ஆழ்மனதில் ஓடிக்கொண்டிருந்தது அந்த நீண்ட நாள் கனவை நினைவாக்கும் ஒரு நாளாகத்தான் அன்று இருந்தது.

பரபரப்பான நகரங்களில் ஒன்றான வவுனியாவில் இருந்து சுமார் அதிகாலை 3 மணி அளவில் எனது நண்பர்களுடன் மோட்டார் சைக்கிளில் இயற்கை எழில் கொஞ்சம் எனது பயணம் ஆரம்பமானது. மோட்டார் சைக்கிள்களை தொலைதூரம் செல்வது என்றால் கொள்ளை பிரியம்.

அதிகாலை என்பதால் சனநடமாட்டம் சற்றே குறைவு. நகர்ப்புற நிலப்பரப்பு படிப்படியாக பசுமை மற்றும் உருளும் மலைகளுக்கு வழிவகுத்தது. எதிர்பார்ப்பு சற்றே நிரம்பியது. ஒரு வழியாக 5 மணித்தியால நீண்ட நேர பயணத்தின் பின் இலக்கை அடைந்தோம் .

ஒரு நீண்ட பயணத்துக்கு பிறகு அமைதியான காட்டுப்புற சூழலுக்கு மத்தியில் அமைந்திருக்கும் ஒரு அழகான சூழல் நிறைந்த இடத்துக்குள் நுழைந்தேன்.

கிராமப்புற வாழ்க்கையின் காட்சிகளிலும் ஒலிகளிலும் நனைந்தபடி அருகில் இருந்த கிராமத்தின் வழியாக நிதானமாக உலா வந்து மலை அடிவாரத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தேன். உள்ளூர் மக்களின் அன்பான புன்னகையும் அவர்களின் வீடுகளில் துடிப்பான வண்ணங்களும் வரவேற்கும் சூழலை உருவாக்கி, உள்ளூர் கலாச்சாரத்தில் என்னை மூழ்கடிக்க அழைத்தன.

சூரியனின் வருகை தென்பட தொடங்கியதும் மூச்சடைக்கக்கூடிய காட்சிகளைக் காண மிக ஆர்வமாக நடந்து கொண்டே இருந்தேன்.

காலை வானத்தில் பொன் நிறங்கள் நிலப்பரப்பில் ஒரு மாயாஜால பிரகாசத்தை உண்டாக்கியது. அதனை ரசித்தபடி அடிவாரத்தினை சென்றடைந்து விட்டேன்.

ஆவலுடன் தொடுவானத்தில் கம்பீரமாக தோற்றமளிக்கும் பழங்கால அதிசயத்தை வெல்வதற்கு தயாராக புறப்பட்டேன் நான். பாறையின் அடிவாரத்தினை நெருங்கியதும் அதன் சுற்றளவு என்னை பிரம்மிப்பில் ஆழ்த்தியது . அதுவரை காலம் பாடநூல்களிலும் புகைப்படங்களிலும் பார்த்து ரசித்த ஒன்றை நேரில் காணும் பொழுது என்னை அறியாத ஒரு பூரிப்பில் வியந்து நின்றேன் .

ஒரு பெரிய ஒற்றைக்கால் பாறையில் செதுக்கப்பட்ட ஒரு மலை அதன் படைப்பாளியின் கட்டடக்கலைத் திறமைக்கு சான்றாக நெஞ்சை மிடுக்க நிமிர்த்தி நின்றது சிகிரியா எனும் ஒற்றை மலை.

பாறை முகத்தில் அலங்கரிக்கும் சிக்கலான சுவரோவியங்கள் மற்றும் சிகரத்தின் மீது ஒரு காலத்தில் இருந்த பிரம்மாண்டமான அரண்மனையின் எச்சங்கள் பண்டைய இலங்கை நகரத்தின் செழுமையை பற்றிய பார்வையை வழங்கியது.

செங்குத்தான படிக்கட்டுகள் மற்றும் குறுகிய பாதைகள் என்னை அழைத்துக் கொண்டே சென்றன. ஒரு காலத்தில் கோட்டையாக பாதுகாத்து வந்த ஹைட்ராலிக் அமைப்புகள் மற்றும் தற்காப்பு அரண்களை பார்த்து வியப்பு தோன்றியது இதுதான் படைப்பாளியான காசியப்பனின் புத்திசாலித்தனத்துக்கு சான்றாகும்.

செங்குத்தான படிக்கட்டுக்கள் என் மூச்சிற்கு சவாலாக இருந்தது நண்பர்களும் படிக்கட்டுகளை கீழே பார்த்து மேலே பார்த்து சற்று தான் சற்று தான் என்று உற்சாகமளித்தபடி முன்னேறி கொண்டிருந்தனர். இடையிலே நான் அமர்ந்து விட்டேன். உடல் எடை எனக்கு தொடர்ச்சியாக தடை விதித்து. ஓரமாக சற்று ஓய்வெடுத்தேன். சிறு சிறு சிறுவர்கள் வயதானவர்கள் என எல்லோரும் செங்குத்து படிக்கட்டுகளில் தவழ்ந்த வண்ணம் உற்சாகமாக ஏறினார்கள். அவர்களை பார்க்க எனக்குள் ஒரு உற்சாகம் எனது பல நாள் கனவினை அடைய என் உடல் ஒத்துழைக்காத போதும் என் மனதிற்கு உற்சாகத்தை தந்தது இயற்கை எழில் காட்சிகள். அந்த உற்சாகத்துடன் முன்னேறினேன். அப்படி என்னதான் இருக்கின்றது என பார்த்து விட வேண்டும் என்ற ஆர்வத்துடன் முன்னேறினேன். சீரற்ற படிக்கட்டுகள் "படிக்கட்டுகள் கவனம்" என்று பதாதைகள் பொறிக்கபட்டதை பார்த்துக் கொண்ட எனது சுவடுகளை வைத்துக்கொண்டே சென்று கொண்டிருந்தேன்.

ஒரு வழியாக உச்சியைடைந்து விட்டேன் நான் உச்சியை அடைந்தவுடன் ஏறிவர நான் பட்ட களைப்புகள் ஒரு நொடியில் பறந்து, பரந்து விரிந்த பசுமையான பரப்பு கண்ணுக்கு எட்டிய தூரம் வரை பசு மையான பச்சை இருந்தது. தொலைதூர மலைகளின் கீழே உள்ள காட்சிகளுக்கு ஒரு வியத்தகு பின்னணியை சித்தரித்தன. ஆகா என்ன அழகு இப்படி ஒரு அற்புதமான காட்சியை இன்றுவரை தவற விட்டுவிட்டேன் என்று அந்தக் கணமே எண்ணி னேன் .

உச்சியில் பார்த்த காட்சிகள் ஒரு காலத்தில் செழித்தோங்கி இருந்த பண்டைய நகரத்தின் மீது ஆழ்ந்த மரியாதையை உணர்ந்தேன். மலையின் கம்பீரமும் என்னை வியக்க வைத்தது மலையின் உச்சியில் நீர்த்தடாகங்கள் பழைய அரண்மனை எச்சங்கள் என பல வரலாற்றினை பறைசாற்றியது. சற்று ஓய்வெடுத்து ரசித்து விட்டு மலை உச்சியில் நான் இருக்கும் இறுதி நிமிடங்களில் சூரியன் மறையத்தொடக்கி கொண்டிருந்தது அந்த அழகினை ரசித்தபடி கீழிறங்க தொடங்கினேன்.

நான் சேகரித்த மறக்க முடியாத அனுபவங்களையும் நேசத்திற்குரிய நண்பர்களுடன் நினைவுகளையும் நினைத்துக் கொண்டு கீழ இறங்கிவிட்டேன். உண்மையிலேயே சிகிரியா பாறைக்கோட்டையின் வியக்க வைக்கும் ஒவ்வொரு கணமும் சிகிரியாவின் சிறப்பிற்குச் சான்றாகும். பயணத்தின் இறுதியில் என் உள்ளத்தில் ஒரு அழியாத அடையாளத்தை ஏற்படுத்திய ஒரு உரு மாற்ற அனுபவம்.

அதன் பழங்கால அற்புதங்கள் இயற்கை அதிசயங்கள் இலங்கையின் கலாச்சாரம் மற்றும் தலைமைக்காக ஆழமான மதிப்பினை எனக்குள் விதைத்தது.

அங்கிருந்து விடைபெற்றபோது நினைவுகள் மட்டுமில்லை என்னை சுற்றி உள்ள உலகத்திற்கான புதிய ஆச்சரியம் மற்றும் பிற அமைப்பு உணர்வையும் என்னுடன் எடுத்துச் சென்றேன் காலத்தால் அழியாத அழகும், ஆழமான வரலாறும் கொண்ட இந்த ஒற்றை மலை என் இதயத்தில் என்றென்றும் தனி இடத்தை பிடித்துள்ளது.

## திருவடி நிலையில் கடற்படைக்கு காணி சுவீகரிக்க திட்டம்...!

## சபா.குகதாஸ் விடுத்த வேண்டுகோள்...!



சுழிபுரம் திருவடி நிலைப் பகுதியில் கடற்படைக்கு முகாம் அமைப்பதற்காக அங்குள்ள தனியார் காணிகளை சுவீகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் சபா. குகதாஸ் தெரிவித்துள்ளார்.

சங்கானைப் பிரதேச செயலக எல்லைக்குள் **J/172, J/174** கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் கடற்படையினர் தங்கள் முகாமை நிரந்தரமாக அமைப்பதற்கு நில அளவைத் திணைக்களத்தின் உதவியுடன் தனியார் காணிகளை சுவீகரிக்க 30 ஆம் திகதி காலை 9 மணிக்கு களத்தில் இறங்கவுள்ளனர்.

இந்த சுவீகரிப்பு நடவடிக்கைகளை தடுக்க காணிகளுக்கு சொந்தமான பத்திரங்களை வைத்திருக்கும் உரிமையாளர்கள் தடுத்து நிறுத்த தயாராகுங்கள்.

சுவீகரிக்க தயாராகும் பகுதி மத அடையாளங்களையும் , அதன் புனித தீர்த்த பகுதிகளையும் மக்களின் இறந்த உடலங்களை எரிக்கும் சுடுகாடுகளையும் மீன்பிடித் தொழிலை செய்வோருக்கான கடலோரத்தையும் சுற்றுலாப் பயணிகளின் பொழுது போக்குக்கான பிரதேசமாகவும், தனியார் காணிகளை கொண்டிருப்பதாலும் கடற்படை முகாம்களை நிரந்தரமாக அமைப்பது ஏற்புடையதல்ல எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

## காணி, பொலிஸ் அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்க தயார்...!

## சுமந்திரன் எம்.பியிடம் தெரிவித்த சஜித்...!

மாகாண சபைகளுக்கு காணி பொலிஸ் அதிகாரங்களை முழுமையாக அமுல்படுத்த தான் தயாராக இருப்பதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தனக்கு உறுதியளித்ததாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச கடந்த மேதின நிகழ்வில் 13 ஐ முழுமையாக அமுல்படுத்துவேன் என பகிரங்கமாக அறிவித்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற பாராளுமன்ற அமர்விலே சஜித் பிரேமதாசவை சந்தித்த போது, கடந்த மேதின நிகழ்வில் தான் வெளியிட்ட அறிக்கையை செவிமடுத்தீர்களா என கேள்வி யெழுப்பியிருந்ததாகவும், அதே வேளை மாகாண சபைகளுக்கு காணி பொலிஸ் அதிகாரங்கள் உட்பட 13 ஐ முழுமையாக அமுல்படுத்தவுள்ளதாகவும் மீண்டும் கூறியதாகவும் சுமந்திரன் எம்.பி தெரிவித்தார்.



அ.கிருபாகரன்
- அதிபர் -

அரச அங்கீகாரம் பெற்ற வடமாகாணத்தின் முதல்தர கனரக வாகனப் பயிற்சிப் பாடசாலை...

# கிருபா லேணர்ஸ்

## කිරුබා ලෑර්නර්ස් KIRUBAA LEARNERS

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி
- மும்மொழிகளிலும், உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறையில் கட்டணங்கள்.
- இரவிலும் வாகனப் பயிற்சிகள்.



We are a government Approved fully qualified "A" Grade driving school in Sri Lanka.

**தலைமையகம்**
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
021 222 4353
0777 22 5292

| | | |
|---|---|---|
| சுன்னாகம் 021 224 2022 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 |
| ஆவரங்கால் 021 222 6688 | சித்தங்கேணி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 |
| பூநகரி 021 320 1818 | முழங்காவில் 021 300 6544 | விஸ்வமடு 021 320 1515 |
| மன்னார் 023 225 1656 | கிளிநொச்சி 021 228 5505 | வவுனியா 024 222 7777 |








இப்பத்திரிகை 28.05.2024 அன்று அகரவ் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால், யாழ்ப்பாணம், கண்ணாதிட்டி வீதியில் 27ஆம் இலக்கத்திலுள்ள பணிமனையில் தயாரிக்கப்பட்டு, வெளியிடப்படுகிறது.